பக்கங்கள்: 20

# தீம்புனல் THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 02 புனல்:27 29.10.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053



**காணாமல் போயுள்ள ஓர் உயிரின் பெறுமதி வெறும் 2 லட்சம்தானா?**

பி.மாணிக்கவாசகம்

பக்கம் 04



**இரைப்பை–கள அமிலப்பின்னோட்ட நோய்க்கான உணவு மற்றும் ஆரோக்கிய வாழ்க்கைமுறைப் பரிந்துரைகள்**

ச.திலக்சி

பக்கம் 11



# போராட்டங்களைக் கண்டு கொள்ளாத அரசாங்கம்

வர்மா

அரசாங்கத்துக்கு எதிராக உலக நாடுகளில் போராட்டங்கள் நடைபெறுவது வழமையான ஒன்று. அந்தப் போராட்டங்களுக்கான காரணங்களைக் கண்டு அவற்றைத் தடுப்பதற்கு பல அரசாங்கங்கள் முன் வருவதில்லை. போராட்டங்களை அடக்கி ஒடுக்குவதில் அதிக அக்கறை காட்டப்படுவதால் போராட்டங்கள் நீட்சி பெறுகின்றன. காலிமுகத்திடலில் நடைபெற்ற தொடர் போராட்டத்தினால் இலங்கையில் அரசியல் மாற்றம் ஏற்பட்டது. அரசியல் தலைமையில் மாற்றம் ஏற்பட்டதே தவிர அரசியலில் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை. மறைமுகமாக ராஜபக்ஷ குடும்பம் அரசியலில் ஆதிக்கம் செலுத்துகிறது.

பல்கலைக்கழக மாணவர்கள், தொழிற்சங்கங்கள் கொழும்பில் போராட்டங்களை நடத்துகின்றன. அரசாங்கம் அவற்றை அடக்கி ஒடுக்குவதில் ஆர்வமாக இருக்கிறது.

அரசாங்கத்தின் அடக்குமுளைறக்கு எதிராக நவம்பர் 2 ஆம் திகதி கொழும்பில் எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுப்பதற்கு மக்கள் பேரவைக்கான இயக்கம் ஒழுங்கு செய்துள்ளது அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மாணவர் அமைப்புகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் இணைந்து போராட்டத்தை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பிலான ஒன்றிணைந்த கலந்துரையாடல் கொழும்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, முன்னிலை சோசலிசக் கட்சி அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், இலங்கை ஆசிரியர் சங்கம், இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இதில் கலந்துகொண்டனர்.

போராட்டங்களில் இருந்து சிறுவர்களையும் குழந்தைகளையும் அப்புறப்படுத்த

▶19

# சவாலை சமாளிப்பாரா புதிய பிரதமர் ரிஷி சுனக்?

வானதி



இங்கிலாந்து பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட லிஸ் ட்ரஸ் 45 நாட்களின் இராஜினாமா செய்ததால் புதிய பிரதமராக ரிஷி சுனக் தேர்வு செய்யப்பட்டுள்ளார். லிஸ் ட்ரஸ்ஸுடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்த ரிஷி சுனக் ஆச்சரியப்படும் வகையில் பிரதமர் பதவியில் அமர்ந்துள்ளார்.

இங்கிலாந்தில் உருவான பொருளாதார வீழ்ச்சியால் அப்போதைய பிரதமர் போரிஸ் ஜோன்சன் இராஜினாமா செய்தார். பொருளாதாரத்தை மீட்டெடுக்க சபதம் செய்துகொண்டு பதவி ஏற்ற லிஸ் ட்ரஸ் 45 நாட்களில் வெளியேறினார். இரண்டு தலைவர்கள் புறமுதுகிட்டனர். அடுத்து பதவி ஏற்ற இளம் தலைவர் ரிஷி சுனக் என்ன செய்யப் போகிறார் என்று அறிவதற்காக உலகமே காத்துக் கொண்டிருக்கிறது.

கன்சர்வேடிவ் கட்சியை வழிநடத்தும் போட்டியில் வெற்றி பெற்ற பின்னர், ரிஷி சுனக் பிரதமரானார். வெஸ்ட்மின்ஸ்டரில் உள்ள செல்வந்த அரசியல்வாதிகளில் ஒருவரான சுனக், நவீன காலத்தில் நாட்டின் இளைய தலைவராக மாறுவார் - மேலும் இரண்டு மாதங்களுக்குள் மூன்றாவது தலைவராவார். அவர் பிரிட்டிஷ் அரசியல் வரலாற்றில் மிகவும் கொந்தளிப்பான காலகட்டத்தில் பதவியேற்கிறார். பல ஆண்டுகளாக அரசியல் மற்றும் பொருளாதாரக் கொந்தளிப்பில் இருந்து தத்தளிக்கும் ஒரு நாட்டில் ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க வேண்டும் மற்றும் சித்தாந்த அடிப்படையில் பிளவுபட்ட ஒரு கட்சியை வழி நடத்த முற்படுகிறார்.

முன்னாள் பிரதமர் போரிஸ் ஜோன்சனின் அமைச்சரவையில் இருந்து ரிஷி சுனக் இராஜினாமா செய்தபோது துரோகம் செய்ததாக சிலர் குற்றம் சாட்டினர். பிரிட்டனின் மேலாதிக்க அரசியல் கட்சியை ஒன்றிணைக்க கடுமையாக அவர் உழைக்க வேண்டியிருக்கும். 2016 இல் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேறுவதற்கு வாக்களித்ததிலிருந்து பிரிட்டன் நிரந்தர நெருக்கடிக்குத் தள்ளப்பட்டது.

ரிஷி சுனக் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இங்கிலாந்தின் முதல் பிரதம மந்திரி ஆவார். சுனக் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் பயின்றார், அங்கு அவர் தனது மனைவி அக்ஷதா மூர்த்தியைச் சந்தித்தார், அக்ஷதாவின் தந்தை இந்திய கோடீஸ்வரர் என்.ஆர்.நாராயண மூர்த்தி, அவுட்சோர்சிங் நிறுவனமான இன்ஃபோசிஸ் லிமிடெட் நிறுவனர் ஆவார்.

ரிஷி சுனக் ஒரு திறமையான பொருளாதாரக் கொள்கை வகுப்பாளராகக் காணப்பட்டாலும் அவர் வெள்ளையர் அல்ல. அந்த வகையில் இங்கிலாந்தின் முதல் வெள்ளையர் அல்லாத பிரதமர் ரிஷி சுனக் ஆவார். இது இங்கிலாந்தில் பலரால் ஜனநாயகத்தின் கேலிக்கூத்தாகப் பார்க்கப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சுனக் வெற்றி பெற்றாலும் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவிதி மாறாது.

சமீப காலத்தில், பிரிட்டன் பொருளாதாரம் எதிர்கொள்ளும் முக்கிய சவாலானது, விதிமுறைகள் - வர்த்தக அதிர்ச்சி ஏற்றுமதியுடன் ஒப்பிடும் போது இறக்குமதியின் விலை அதிகரிப்பு. இந்த விளைவுகள் பணவீக்கத்தை அதிகரிக்கின்றன, ஆனால் உள்நாட்டு வருமானத்தை முடக்குகின்றன. இந்த விளைவுகள் வரவிருக்கும் ஆண்டில் வீட்டு மற்றும் கார்ப்பரேட் துறைகள் இரண்டிலும் தேவைக்கு அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

இந்த இழப்பு எவ்வாறு ஒதுக்கப்படுகிறது என்பதுதான் முக்கிய கொள்கை கேள்வி. குடும்பங்களுக்கு,செலவு அதிகரிப்பு. இதைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்களைத் தாக்கும் - நடுத்தர காலத்தில், அடமானச் செலவுகளில் கூர்மையான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 2024க்குள் இது மேலும் அதிகரிக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இங்கிலாந்து பொருளாதாரத்தின் விநியோகப் பக்கத்தில் உள்ள பலவீனம் இப்போது அவசர கவலையாக உள்ளது. உற்பத்தியானது அதன் கொவிட்க்கு முந்தைய போக்கைவிட 2.6% குறைவாக உள்ளது. தேவை குறைவதால் வேலையில்லாத் திண்டாட்டம் விரைவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பணவீக்கம் மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அது உச்சத்தில் இருந்து (12%க்கு அருகில்) குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் 2023 முழுவதும் அது அதிகமாக இருக்கும்.

இது பிரிட்டன் ஆட்சியாளர்களுக்கு மேலும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. எளிமையாகச் சொன்னால், ஒருபுறம், சில்லறை பணவீக்கம் இரட்டை இலக்கத்தில் குடும்பச் செலவை நெருக்கடியில் ஆழ்த்தும். மறுபுறம் பொருளாதார வளர்ச்சியின் பிரச்சினை, இது குறைந்த வருவாய் மற்றும் அதிக கடன்களுக்கு வழிவகுக்கிறது.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் செலவீனங்களைக் கட்டுப்படுத்துவதால், அது பொருளாதார வளர்ச்சி மேலும் பாதிப்புக்குள்ளாக்கும்.

வட்டி விகிதங்களைக் குறைவாக வைத்திருப்பதன் மூலமும் அரசாங்க செலவீனங்களை விரிவுபடுத்துவதன் மூலமும் வளர்ச்சியை உயர்த்துவதற்கான எந்தவொரு முயற்சியும் பணவீக்கத்தை மோசமாக்கும் அல்லது மக்களின் வாங்கும் திறனை மேலும் குறைக்கும்.

பலரும் பிரிட்டன் நாட்டின் பிரதமராக முதல் வெளிநாட்டவர் அதாவது, பிரிட்டன் வம்சாவளியை அல்லாதவர் எனப் பேசி வருகின்றனர். ஆனால், உண்மையில் ஆசிய வம்சாவளிப் பிரிவில்தான் ரிஷி சுனக் முதல் பிரிட்டன் பிரதமர். பெஞ்சமின் டிஸ்ரேலி என்பவர் 20 பெப்ரவரி 1874 - 21 ஏப்ரல் 1880 மற்றும் 27 பெப்ரவரி 1868 - 1 டிசம்பர் ஆகிய காலகட்டத்தில் பிரிட்டன் நாட்டின் பிரதமராக இருந்துள்ளார். இவருடைய தந்தை ஐசக் டி' இஸ்ரேலி பிரிட்டிஷ் எழுத்தாளர். இவருடைய தாத்தா பெஞ்சமின் டி' இஸ்ரேலி இவர் இத்தாலியில் யூத குடும்பத்தில் பிறந்த ஒரு வணிகர் ஆவார்.



ரிஷி சுனக் 12 மே 1980 அன்று பிரிட்டன் நாட்டின் சவுத்தாம்ப்டன் பகுதியில் இந்திய வம்சாவளியே சேர்ந்த யாஷ்வீர் மற்றும் உஷா சுனக் ஆகியோருக்குப் பிறந்தார். ரிஷி சுனக் பெற்றோர்கள் இருவருமே ஆபிரிக்காவில் பிறந்தவர்கள்.

அவரது தந்தை யாஷ்வீர் கென்யாவின் காலனி மற்றும் பாதுகாப்பகத்தில் (இன்றைய கென்யா) பிறந்து வளர்ந்தார். அவரது தாயார் உஷா, இதே கென்யாவின் தங்கனிகா பிறந்தவர் (இது தான்சானியாவின் ஒரு பகுதியாக மாறியது). இவர்களின் குடும்பம் பிரிட்டனுக்கு மாறிய பின்பு யஷ்வீர் ஒரு மருத்துவராக இருந்தார், மற்றும் உஷா ஒரு பார்மாசிஸ்ட் ஆகவும் பணியாற்றி வந்தனர். உஷா அவர் உள்ளூரில் மருந்தகத்தை நடத்தி வந்தார்.

ரிஷி சுனக்கின் தாத்தாவான ராம்தாஸ் சுனக் குஜ்ரன்வாலா என்னும் பகுதியில் பிரிட்டிஷ் இந்திய காலத்தில் பிறந்தார், தற்போது இது பாகிஸ்தான் நாட்டின் ஒரு பகுதியாக உள்ளது. ராம்தாஸ் சுனக் 1935 இல் குமாஸ்தாவாகப் பணியாற்றத் தனது மனைவி சுஹாக் ராணி சுனக் உடன் நைரோபிக்கு சென்றார்.

இதேபோல் ரிஷி சுனக் தாய் வழி தாத்தாவான ரகுபீர் சைன் பெர்ரி தங்கனிகா வரி அதிகாரியாகப் பணி புரிந்தார். இதைத் தொடர்ந்து மேலும் 16 வயதான தங்கனிகா ஸ்ரக்ஷாவை திருமணம் செய்தார். அவருடன் அவருக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன, இவர்க ளுடைய குடும்பம் 1966 இல் பிரிட்டனுக்குக் குடிபெயர்ந்தது.

பிரிட்டனுக்கு குடிபெயர்ந்தார். இதே வேளையில் ராம்தாஸ் சுனக்கின் குடும்பமும் பிரிட்டனுக்குக் குடிபெயர்ந்தது. பிரிட்டனில் யாஷ்வீர் மற்றும் உஷா ஆகியோர் சந்தித்துத் திருமணம் செய்து கொண்டனர்.

இங்கிலாந்து பிரதமராக ரிஷி சுனக் பதவியேற்ற பிறகு நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது: "கொரோனா பெருந்தொற்று, உக்ரைன் போர் காரணமாக உலகம் முழுவதும் எரிபொருள் சந்தை, விநியோக சந்தை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக இங்கிலாந்தும் பல்வேறு பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும் என்றே முன்னாள் பிரதமர் லிஸ் ட்ரஸ் முயற்சி செய்தார். மாற்றத்துக்கான அவருடைய முயற்சிகளைப் பாராட்டுகிறேன். ஆனால், சிலதவறுகளால் மோசமான விளைவுகள் ஏற்பட்டன. அந்தத் தவறுகளை நான் சரி செய்வேன்."

இதற்காக கடுமையான கட்டுப்பாடுகள், நடைமுறைகள் அமுல் செய்யப்படும் என்று அஞ்ச வேண்டாம். கொரோனா காலத்தில் நாட்டின் நிதியமைச்சராக நான் எவ்வாறு பணியாற்றினேன் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

மக்களின் நலன், வியாபாரிகளின் நலன்களைக் கருத்தில் கொண்டே அரசின் செயல்பாடுகள் இருக்கும். நாடு எதிர்கொண்டிருக்கும் சவால்களுக்கு தீர்வு காண்பேன். எனது தலைமையிலான அரசு உங்கள் குழந்தைகள், பேரக்குழந்தைகளின் வளர்ச்சியையும் உறுதி செய்யும்.

நாட்டை ஒன்றிணைப்பேன். வெறும் வார்த்தைகளால் அல்ல. செயல்பாடுகளால் நாட்டை ஒன்றிணைப்பேன். இரவு, பகலாக உங்களுக்காக உழைப்பேன். அரசதுறைகளின் ஒவ்வொரு நிலையிலும் நிபுணத்துவம், திறமை வெளிப்படும். கன்சர்வேடிவ் கட்சியினரின் நம்பிக்கையைப் பெற்றுள்ளேன். அடுத்து மக்களின் நம்பிக்கையையும் பெறுவேன்.

முன்னாள் பிரதமர் போரிஸ் ஜோன்சனின் சாதனைகளை இப்போது நினைவுகூர்கிறேன். அவரது சாதனைகள், பெருந்தன்மைக்கு வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன். கடந்த 2019 ஆம் ஆண்டில் கன்சர்வேடிவ் கட்சி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன். சுகாதார கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தப்படும். சிறப்பு பள்ளிகள், பாதுகாப்பான சாலைகள் உறுதி செய்யப்படும். சுற்றுச்சூழல் பேணிக்காக்கப்படும். நாட்டின் எல்லைகள் பாதுகாக்கப்படும்.

பாதுகாப்பு படைகளுக்கு முழு ஆதரவு அளிக்கப்படும். முதலீடு, புதுமையான திட்டங்கள் மூலம் நாட்டின் பொருளாதாரம் மேம்படுத்தப்படும். பிரெக்ஸிட்டால்கிடைத்த வாய்ப்புகள் முழுமையாகப் பயன்படுத்தப்படும். வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்படும். வளமான எதிர்காலத்தை நோக்கி நாட்டை வழிநடத்துவேன். அரசியலைத் தாண்டி மக்கள் நலனுக்கு முன்னுரிமை அளிப்பேன். நாம் ஒன்றிணைந்து செயல்பட்டு புதிய சாதனைகளைப் படைப்போம். புதிய நம்பிக்கையோடு பயணத்தைத் தொடங்குவோம். இவ்வாறு அவர் பேசினார்.

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.com
news@theempunal.com

THEEMPUNAL
தீம்புனல்

# போதையாலும் மோகத்தாலும் தடுமாறும் இளைய சமுதாயம்

போதைவஸ்து பாவனை பாடசாலை மாணவர்கள் மத்தியில் மிக வேகமாகப் பரவி வருகிறது. அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் செய்து வருகிறது. இந்த நிலையில் பாடசாலை மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் பால்வினை நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

18 முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே இந்த நோய் பரவுகிறது, இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இதுபோன்ற 50 வழக்குகள் பதிவாகியுள்ளன என்று தேசிய STD மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் பணிப்பாளர் டொக்டர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்தார். இதனை வெறும் செய்தியாகக் கடந்து போய்விட முடியாது.

பதினாறு பல்கலைக்கழக மாணவர்களும் மூன்று பள்ளி மாணவர்களும் பதிவான வழக்குகளில் அடங்குவதாக அவர் கூறினார். இலங்கையில் சுமார் 2,350 பேர் எச்.ஐ.விக்கு சிகிச்சை பெற்று வருவதாகவும் சமூகத்தில் சுமார் 3,750 எச்.ஐ.வி பாதிக்கப்பட்டவர்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். இளைஞர்கள் போதைப்பொருள் பாவனையினாலும் குழுவாக கலந்துகொள்ளும் விருந்துகள் போன்ற சமூக நிகழ்வுகளினாலும் இந்நோய் தொற்றியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இணையவழிக் கல்வியும் இதற்கு முக்கிய காரணம் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். பெற்றோர் இளையோர் தொடர்பில் கூடுதலாக தேடுவதில்லை. கல்வி நடவடிக்கைகளுக்கு அப்பாற் சென்று, தேவையற்ற காணொளிகளை பார்வையிட்டு, அதற்கு அடிமையாகின்றனர். இணைய வழியாக கல்வி கற்கும் போது, அதற்கு அப்பாற் சென்றும் தமது பிள்ளைகள் குறித்து பெற்றோர் அவதானத்துடன் இருக்க வேண்டும். சில பெற்றோருக்கு அது குறித்து ஆராய்வதற்கான புரிந்துணர்வு கிடையாது. இது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும்.

இளைஞர்கள் இந்த வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும் பட்சத்தில், தொடர்ச்சியாக மருந்து அருந்த வேண்டும். அதையும் தவிர்ந்த பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

போதையாலும் பால்வினை நோயாலும் இளைஞர்கள் பாதிக்கப்படும் போது அடுத்த தலைமுறையில் பாரிய தாக்கம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. பாடசாலையில் ஆசிரியர்களும் வீட்டில் பெற்றோரும் பிள்ளைகளின் மேல் மிகுந்த அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

எது சரி, எது பிழை என்பதை மாணவர்களின் மனதில் புகுத்த வேண்டும். அந்தப் பொறுப்பில் இருந்து பெற்றோரும் ஆசிரியர்களும் ஒதுங்கக் கூடாது. ■

---

# பொருட்களின் விலைக்குறைப்பை மக்கள் அனுபவிக்க முடியாதநிலை

எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் கோதுமை மா போன்ற சில அத்தியாவசியப் பொருட்களின் விலை அண்மைக் காலமாகக் குறைக்கப்பட்ட போதிலும் அதன் நன்மைகள் இன்னும் நுகர்வோருக்குச் சென்றடையவில்லை. நுகர்வோர் பொருட்கள் சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் குறைக்கப்பட்ட ஆற்றல் செலவுகளை எதிர்க்கின்றனர், மற்ற விடயங்களில் அதிக செலவீனங்களைக் குறிப்பிடுகின்றனர்.

கடந்த வாரம், தனியார் வர்த்தகர்களால் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா சந்தைக்கு வந்ததால், கோதுமை மாவின் மொத்த விலை 85 ரூபாவால் குறைக்கப்பட்டது. அதே வாரத்தில் 92 ஒக்டேன் பெற்றோல் 40 ரூபாவினாலும் சுப்பர் டீசல் 15 ரூபாவினாலும் குறைக்கப்பட்டது.

ஆகஸ்ட் 8 ஆம் திகதி, 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ.245 குறைக்கப்பட்டது, 5 கிலோ மற்றும் 2.3 கிலோ சிலிண்டர்களின் விலை முறையே ரூ.99 மற்றும் ரூ.45 குறைக்கப்பட்டது.

எரிபொருள் விலை குறைந்தாலும் அன்றாடச் செலவுகள் அதிகரிக்கின்றன. முச்சக்கர வண்டி, பஸ் கட்டணம் அதிகம். கோதுமை மாவின் விலை குறைந்தாலும் ரொட்டி விலை உயர்ந்துள்ளது.

வர்த்தகர்கள், போக்குவரத்து வழங்குநர்கள் மற்றும் பேக்கரி உரிமையாளர்கள் மற்ற செலவுகள் அதிகமாக இருப்பதால் விலையை குறைக்க மாட்டோம் என்று கூறுகிறார்கள்.

பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன கூறுகையில், கொரோனா வைரஸுக்கு முந்தைய விலையை அடையவில்லை. பொருளாதார நெருக்கடிக்கு முன்பு ஒரு கிலோ கோதுமை மாவை 250 ரூபாய்க்கு வாங்கினோம், ஆனால் தட்டுப்பாடு காரணமாக முந்தைய மாதங்களில் விலை 420 ரூபாயாக உயர்ந்தது. வெண்ணெய் மற்றும் முட்டையின் விலை உயர்வாகவே உள்ளது என்றார் .

“இன்னும் சில பேக்கரி நடத்துபவர்கள் ஒரு கிலோ மாவுக்கு 300 ரூபாய் கொடுத்து கறுப்புச் சந்தையில் மாவு வாங்குகிறார்கள். இரண்டு கோதுமை இறக்குமதியாளர்கள்கூட, 285 முதல், 320 ரூபாய்க்கு விற்கின்றனர். எங்கள் விலையை குறைக்க முடியாது,” என்றார்.

துருக்கிய கோதுமை மாவின் வருகையுடன் விலை வீழ்ச்சியடைந்ததாக பெயர் வெளியிடாத இறக்குமதியாளர் ஒருவர் தெரிவித்தார். ஒரு கிலோ 265 ரூபாயாக இருந்தாலும் வரத்து அதிகமாக இருப்பதால் விலை மேலும் குறையும். சந்தை அழுத்தங்கள் விலையைக் குறைக்கும் வரை பேக்கரிகள் எதிர்ப்பதாக அவர் கூறினார்.

“மா தட்டுப்பாடு உள்ளது. பேட்டை வர்த்தகர்களால் இறக்குமதி செய்யப்படும் மலிவான மாக்களை நாங்கள் தேர்வு செய்ய முடியாது, ஏனெனில் நிறுவனங்கள் எங்களை தடுப்புப்பட்டியலில் சேர்க்கலாம் மற்றும் பின்னர் எங்களுக்கு மா வழங்காது,” என்றார்.

கோதுமை, மின்சாரம், முட்டை, பேக்கிங் பவுடர் மற்றும் ஈஸ்ட் ஆகியவற்றின் விலை உயர்வு காரணமாக ஊழியர்களின் எண்ணிக்கையை 16 இல் இருந்து 5 ஆக குறைக்க வேண்டும் என்று தில்லைநாதன் கூறினார். ■



# காணாமல் போயுள்ள ஓர் உயிரின் பெறுமதி வெறும் 2 லட்சம்தானா?

பி.மாணிக்கவாசகம்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கையிலேயே அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்கின்றது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதில் அரசுக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. அந்த விடயத்தில் நியாயத்தை நிலைநாட்டுவதிலும் அரசு உரிய கவனம் செலுத்துவதாகவும் தெரியவில்லை.

ஆனால், இவ்விடயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்கான பொறிமுறைகளைச் செயற்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தப்படுவதாக அரசு வெளிக்காட்டியுள்ளது. இந்த முயற்சியின் அடையாளமாகவே புதிய ஆணைக்குழு ஒன்றின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆணைக்குழுவின் விசாரணைகளில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை எனக்கூறி, அந்த ஆணைக்குழுவின் விசாரணைகளை அவர்கள் புறக்கணித்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. ஏனெனில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டும் கடத்திச் செல்லப்பட்டும் வீதிகளில் வேலைத் தளங்களில் வைத்து பிடித்துச் செல்லப்பட்டவர்களுமே காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். கைது செய்தமை, ஆட்களைக் கடத்திச் செல்லப்பட்டமை, பிடித்துச் செல்லப்பட்டமை உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளும் அரச படைகளின் பாதுகாப்பிலும் பூரண கட்டுப்பாட்டிலும் இருந்த பிரதேசங்களிலேயே நடைபெற்றிருக்கின்றது.

இவற்றைவிட விசேடமாக யுத்தம் முடிவுக்கு வந்த சூட்டோடு சூடாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை இராணுவத்திடம் சரணடையுமாறு அரசாங்கமே கோரியிருந்தது. அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கப்படும். பொதுமன்னிப்பின் கீழ் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற உத்தரவாதத்தையும் அரசு இராணுவத்தின் ஊடாக வழங்கியிருந்தது.

அரசாங்கத்தின் அறிவித்தலை ஏற்று அதில் நம்பிக்கை வைத்து பலர் இராணுவத்தினரிடம் சரணடைந்தார்கள். யுத்தமுனைப் பிரதேசமாகத் திகழ்ந்த முல்லைத்தீவின் வட்டுவாகல் மற்றும் ஓமந்தையிலும் பலர் இராணுவத்திடம் சரணடைந்தார்கள். இதைவிட இடம்பெயர்ந்தவர்களுக்கு அபயமளிக்கப்பட்டிருந்த வவுனியா மனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் வைத்தும் பலர் பிடித்துச் செல்லப்பட்டனர். இவர்களில் 13 ஆயிரம் பேர் வரையில் அரசாங்கத்தினால் புனர்வாழ்வுப் பயிற்சி அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.



ஆனால், அதேவேளை அவர்களுடன் இருந்த பலருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. அவர்களை அரசு என்ன செய்தது? என்ற கேள்விக்குப் பதில் இல்லாத நிலைமையே தொடர்கின்றது. அவர்கள் காணாமல் போயுள்ளார்கள் அல்லது காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதே நிதர்சனமாக உள்ளது.

சரணடைந்து காணாமல் போயுள்ளவர்கள் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களிடம் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள் முறையிட்டிருக்கின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டுள்ள தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தருவதற்கு உதவுமாறு தமது முறைப்பாடுகளில் அவர்கள் கோரியிருக்கின்றார்கள்.

இது மட்டுமல்லாமல் அரசாங்கங்களினால் நியமிக்கப்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்களின் விசாரணை அமர்வுகளின் முன்னால் தோன்றி காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவுகள் முறையிட்டிருக்கின்றார்கள் சாட்சியங்களை அளித்திருக்கின்றார்கள். இதற்கும் அப்பால் அரசாங்கத்தின் நிர்வாகப் பொறிமுறைக் கட்டமைப்பின் கீழ் கிராம சேவை அதிகாரி உள்ளிட்ட அடிமட்ட அதிகாரிகளின் ஊடாகவும் தகவல்கள் திணைக்கள மட்டத்தில் திரட்டப்பட்டிருந்தன. இவ்வளவுக்குப் பின்னரும் அரசாங்கத்திடம் காணாமல் போயுள்ளவர்கள் பற்றிய துல்லியமான சரியான புள்ளிவிபரத் தகவல்கள் இல்லை. அத்தகைய புள்ளிவிபரத் தரவுகளைக் கொண்டிருக்க வேண்டிய பொறுப்பில் இருந்து அரசுகள் தவறியிருக்கின்றன.




இத்தகைய பின்புலத்தில்தான் ஆட்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்குப் பொறுப்பானவர்கள் என சந்தேகிக்கப்படுகின்ற இராணுவத்தினரை விசாரணைக்கு உட்படுத்த இடமளிக்க மாட்டோம் என்று அரசுகள் கூறியிருக்கின்றது.

காணாமல் போயுள்ளவர்கள் விடயத்தில் அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாட்டை மற்றுமொரு விடயமும் உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் இரண்டு தொகுதிகளாக ஆட்கொணர்வு மனுக்கள் வழக்குகளாகத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் முதல் தொகுதி வழக்குகள் பற்றிய சம்பவம் இடம்பெற்ற வட்டுவாகல் பிரதேசத்தின் நீதி நியாயாதிக்கத்தைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் ஆரம்ப விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா மேல் நீதிமன்றம் அறிவித்தல் வழங்கியிருந்தது.

இந்த நிலையில் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இடம்பெற்ற விசாரணை அறிக்கை வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, அது நிலைப்பாடு தெரிவிக்கப்பட வேண்டிய நிலையில் அந்த வழக்கு நிலுவையில் இருக்கின்றன. அதேபோன்று இரண்டாம் தொகுதி வழக்குகளும் விசாரணை மட்டத்தில் நிலுவையில் இருக்கின்றன. இந்த வழக்குகள் நீண்ட கால தவணை முறையில் பல வருடங்களாக இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

தமது உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளமைக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்காக பல்வேறு அமைப்புகளிடமும் முறையிட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் நீதிமன்றத்தின் ஊடாக உண்மையைக் கண்டறிந்து நியாயம் பெறவும் நீதியை நிலைநாட்டவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் காலம் கடந்த நிலையிலேயே தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரத்தில் உண்மையாக என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதும் அது விடயத்தில் குற்றவாளிகள் யார் என்பதை இனங்காண்பதும் இனங்களுக்கிடையில் மனக்கசப்பையும் பகைமை உணர்வையும் ஏற்படுத்திவிடும். இந்த நிலைமை நாட்டின் ஐக்கியம் இனங்களுக்கிடையிலான நல்லுறவு, புரிந்துணர்வு என்பவற்றுக்குப் பாதகமாக அமைந்துவிடும் என்று அரச தலைவர்களும் அமைச்சர்களும் காரணம் கற்பித்திருக்கின்றார்கள்.

இதில் இன்னுமொரு விடயமும் உண்டு. குற்றமிழைத்த படையினரைப் பாதுகாக்க வேண்டும். தேசிய பாதுகாப்பை நிலைநாட்டுவதற்கும் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கும் உயிர்களைப் பணயம் வைத்துப் போராடிய படையினரை - குற்றம் செய்திருந்தாலும் தண்டிக்கக் கூடாது. அவர்கள் மத்தியில் உள்ள குற்றவாளிகளையும் இனங்காட்டக் கூடாது. இதற்காக தண்டனை விலக்கீட்டுக் கலாசாரத்தை அரசாங்கம் கையில் எடுத்திருக்கின்றது. இதுவும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய விவகாரம் இழுபறி நிலைமைக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

ஆக இத்தகைய நிலைமையிலேயே காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய விவகாரத்திற்குத் தீர்வு காணும் முயற்சிகளைக் கண்துடைப்பு நடவடிக்கைகளாக அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. அதன் மற்றுமொரு நடவடிக்கையாகவே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் மற்றும் இழப்பீட்டுப் பொறிமுறையின் ஊடாகவும் இந்த விடயத்திற்கு முடிவு காண்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அத்துடன் காணாமல் போயுள்ள ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாவாக இருந்த இழப்பீட்டுத் தொகையை 2 இலட்சம் ரூபாவாக அதிகரித்திருப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறிவதற்குப் பதிலாக, ‘நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும்’ என்ற போக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2 இலட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகையை வழங்கி இந்த விவகாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள் கூறியிருக்கின்றனர்.

இழப்பீட்டுத் தொகையைத் தாங்கள் பெறப் போவதில்லை என திட்டவட்டமாகத் தெரிவித்துள்ள அவர்கள், இழப்பீடு வழங்குவதையே பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்படத் தொடங்கியுள்ள ஆணைக்குழுவின் விசாரணைகளிலும் பங்கேற்கப் போவதில்லை எனவும் தெரிவித்திருக்கின்றனர்.

‘நாங்கள் இழப்பீட்டுப் பணத்தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக நாங்கள் பல வருடங்களாகப் போராடவில்லை. எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறிந்து அதன் ஊடாக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் நியாயம் வழங்கப்பட வேண்டும். இதனையே நாங்கள் கோருகின்றோம்.

எமது உறவுகளின் உயிர்கள் விலைமதிப்பற்றவை. காணாமல் ஆக்கப்பட்டுள்ள எங்கள் உறவுகளைக் கொச்சைப்படுத்தும் நோக்கத்துடனேயே ஒருவருக்கு 2 இலட்சம் ரூபா விலைமதிப்புச் செய்து இழப்பீட்டுத் தொகையை அரசு அறிவித்திருக்கின்றது’ என காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

வடபகுதிக்கு விஜயம் மேற்கொண்ட கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக விவகாரங்களுக்கான பிரதித் தலைமை அதிகாரி டொக் ஸொனெக் அவர்களிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. காணாமல் போனோருக்கான அலுவலகத்தை முழுமையாகத் தாங்கள் நிராகரிப்பதாகவும் அதன் செயற்பாடுகளில் தங்களுக்கு நம்பிக்கை இல்லையென்றும் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

இத்தகைய நிலையில் அரசாங்கம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் தொடர்ந்தும் அக்கறையற்ற மேம்போக்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து, இதயசுத்தியுடனான நடவடிக்கைகளின் மூலம் தீர்வு காணவும் நீதியை நிலைநாட்டவும் முன்வர வேண்டும். ■

# இரட்டைக் குடியுரிமையும் இரட்டை வேடமும்

அவதானி




இந்தப்பதிவை எழுதுவதற்கு முன்னர், ஒரு குட்டிக் கதையைச் சொல்லிவிடலாம் போலத் தோன்றுகிறது.

இக்கதை முகநூல் சம்பந்தப்பட்டது. இதனை எழுதும் தருணத்தில் தமிழ்நாடு சன் தொலைக்காட்சிக்காக பேராசிரியர் சாலமன் பாப்பையாவின் தலைமையில் தீபாவளித் திருநாளை முன்னிட்டு சிறப்புப் பட்டிமன்றம் நடந்தது.

செல்ஃபோனால், நன்மையா..? தீமையா..? என்பதுதான் தலைப்பு.

அதுபோன்று முகநூலினால் நன்மையா..? தீமையா..? என்றும் இரட்டைக் குடியுரிமையால் நன்மையா..? தீமையா..? என்றும் பட்டிமன்றங்கள் நடத்தலாம்.

இனி, சொல்லவேண்டிய குட்டிக் கதைக்கு வருகின்றோம்.

ஒரு தமிழ் அன்பர், இலங்கையில் நீடித்திருந்த போர் நெருக்கடியினால், ஒரு ஏஜன்ஸி மூலம் நாட்டைவிட்டுச் சென்று, வெளிநாடொன்றில் தஞ்சம் புகுந்தார். அங்கு அகதியாக விண்ணப்பித்தார். அங்கிருந்த குடிவரவு - குடியகல்வு திணைக்களம் அவரது விண்ணப்பத்தை பரிசீலித்து, நீண்ட இழுத்தடிப்புக்குப் பின்னர் மனிதாபிமான அடிப்படையில் நிரந்தர வதிவிட அனுமதியை வழங்கியது. அதனை வைத்துக்கொண்டு அவர் கடுமையாக உழைத்து முன்னேறினார். புகலிடம் தந்த நாட்டுக்கும் வரிசெலுத்தினார்.

சில வருடங்களில் அந்த நாட்டு குடியுரிமையும் பெற்று, அந்த நாட்டு கடவுச்சீட்டும் பெற்றார். தன்னால் இனிமேல் எந்த நாட்டில் வாழமுடியாது என்று முதலில் சொன்னாரோ, அதே தாய் நாட்டிற்கும் அந்தப் புதிய கடவுச்சீட்டின் மூலம் வந்து திரும்பினார்.

நீடித்த போர் முடிவுக்கு வந்ததும் இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க முடியும் எனக் கருதியதும் பெருந்தொகை பணத்தையும் அதற்காக செலவிட்டு, இரட்டைக் குடியுரிமையும் பெற்றுக்கொண்டார்.

அதனால் அவருக்கு பல நன்மைகள் விளைந்தன. வெளிநாட்டு குடியுரிமையுடன் தாயகம் சென்றால் ஒரு மாதம்தான் விஸா தருவார்கள். இரட்டைக் குடியுரிமையுடன் சென்றால், கூடுதல் மாதம் நின்று திரும்பலாம். இலங்கை குடிவரவு திணைக்களத்திற்கும் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை.

மற்றும் ஒரு தடவை அந்த இரட்டைக் குடியுரிமை பெற்ற அன்பர் தாயகம் சென்றார். அவரது நண்பர் ஒருவர் ஒரு உல்லாசப் பயணிகள் தங்குமிட விடுதி கட்டி முடித்து, அதன் திறப்புவிழாவுக்கு குறிப்பிட்ட இரட்டைக் குடியுரிமை பெற்ற அன்பரையும் அழைத்தார். அந்த விழாவின் போது எடுத்துக்கொண்ட படங்களை தனது முகநூலில் பதிவேற்றினார் இந்த அன்பர்.

அதனை வெளிநாட்டிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த அந்த அன்பரின் நண்பர் ஒருவர், இவ்வாறு தனது கருத்தை பதிவிட்டிருந்தார்.

“ வாழ்த்துகள். தாய் நாட்டில் வாழ முடியாது என்று வெளிநாட்டுக்கு அகதியாக வந்து, நிரந்தர வதிவிட உரிமையும் பெற்று, அதன் பிறகு குடியுரிமையும் பெற்று வெளிநாட்டு கடவுச்சீட்டுடன் தாயகம் சென்று திரும்பி, இரட்டைக் குடியுரிமையும் பெற்ற பின்னர், மீண்டும் சென்று வெளிநாட்டில் தேடிய சொத்துக்களின் வருமானத்தின் மூலம் ஊரில் உல்லாசப் பயணிகள் விடுதியும் கட்டிவிட்டு, அதற்கு முன்னால் நின்று போஸ் கொடுக்கிறீரா..?”

இதற்குப்பின்னர் என்ன நடந்திருக்கும்... ? அந்த அன்பர், இவ்வாறு எள்ளி நகையாடிய நண்பரை தனது முகநூலிலிருந்து நீக்கி, முடக்கிவிட்டார்.

இனிச்சொல்லுங்கள்: முகநூல் நன்மையா..? தீமையா..?

இலங்கை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட 22 ஆவது அரசியல் திருத்தச்சட்டத்திலும் உறை பொருளாகவும் மறை பொருளாகவும் இருப்பதும் இந்த இரட்டைக் குடியுரிமை விவகாரம்தான்.

ஜனாதிபதியிடம் குவிந்து கிடக்கும் அதிகாரத்தைக் குறைப்பதற்கு இது வழிசெய்யுமா..? இல்லையா..? என்பது ஒரு புறமிருக்க, பசில் ராஜபக்ஷ மீண்டும் இலங்கை அரசியலுக்குள் தீவிரமாகப் பிரவேசித்துவிடுவாரா..? இல்லையா...? என்ற கேள்வியும் தொக்கி நிற்கிறது.

இது இவ்விதமிருக்க, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இந்த விவாதத்தில் கலந்துகொள்ளவும் இல்லை. வாக்களிக்கவும் இல்லை.

மொட்டுக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ அமெரிக்க குடியுரிமையைத் துறக்க தீர்மானித்திருப்பதாக செய்திகள் கசிகின்றன. அதனை வைத்துக்கொண்டுதான் சில மாதங்களுக்கு முன்னர் அவர் பாராளுமன்றத்துள் பிரவேசித்து, நிதியமைச்சரானார்.

பின்னர் “கபுடா” (காகம்) என்ற பெயருடன் பறந்து சென்றார். மீண்டும் பறந்து வரப்போகிறார்.

அவரது கட்சி சிங்களவர்களின் கட்சி என எடுத்துக்கொண்டால், தமிழர்களின் கட்சி மாத்திரம் என்னவாம்..? என்று ஸ்ரீமான் பொதுஜனன் கேட்கிறார்.

பாராளுமன்றில் பிரதிநிதிகளாகவிருக்கும் சில தமிழர்களும் இரட்டைக் குடியுரிமையுடன்தான் இருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். அத்துடன் தனக்குத் தெரிந்த வகையில் இரண்டு, மூன்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைக் குடியுரிமையுடன் இருக்கிறார்கள், தனக்குத் தெரியாதவகையில் மேலும் சிலர் இருக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், தனக்குத் தெரிந்தவர்களின் பெயர் விபரங்களை அவர் சொல்லவில்லை. சொன்னால், அந்தப் பிரதிநிதிகளின் சிறப்புரிமையை மீறவேண்டி வந்துவிடுமோ? என அவர் யோசிப்பது புரிந்துகொள்ளத்தக்கது. ஆனால், சபாநாயகர் மற்றும் ஒரு கருத்தையும் சொல்லியிருக்கிறார்.

“பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் இரட்டைக் குடியுரிமை கொண்டிருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.”

இதேவேளை, தேர்தல்கள் ஆணைக்குழுவும் அபாயச் சங்கை ஊதியிருக்கிறது.

இரட்டைப் பிரஜாவுரிமை வைத்திருக்கும் பிரதிநிதிகள் உடனடியாக பாராளுமன்றிலிருந்து வெளியேறிவிடவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இனிவரவிருக்கும் தேர்தல்களின்போது வேட்பு மனுக்களை ஏற்கமுன்னர், தேர்தலில் போட்டியிடுபவருக்கு இரட்டைக் குடியுரிமை இருக்கிறதா? என்பதும் ஆராயப்படும் எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இரட்டைக் குடியுரிமை வைத்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரேனும் இருந்தால், சட்டங்கள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் தமது பதவிகளிலிருந்து விலகிவிடல் வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித்த கேரத்தும் தெரிவித்துள்ளார்.

மொத்தத்தில் 22 ஆவது திருத்தச் சட்டம் சில பாராளுமன்ற உறுப்பினர்களின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது.

இவர்களைத் தெரிவு செய்த மக்கள், இனிமேல் வரப்போகும் தேர்தல்களின்போது தங்களிடம் வாக்கு கேட்டுவரும் வேட்பாளர்களிடத்தில், “ நாங்கள் ஆதரவு தருவது ஒரு புறம் இருக்கட்டும், உங்களுக்கு எத்தனை குடியுரிமை இருக்கிறது..? என்பதை சத்தியம் செய்து சொல்லிவிடுங்கள்” எனக்கேட்கும் காலம் வரப்போகிறது.

■





# காலத்தால் அழியாத சிறுதெய்வ வழிபாடு

கருணாகரன்

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக எங்களுடைய தெருவில் இருந்த முத்துமாரி, ஒரே நாளில் ராஜராஜேஸ்வரியாகி விட்டார். ராஜராஜேஸ்வரியாகியதோடு சினிமாவில் நடப்பதைப்போல எல்லாமே மாறி விட்டன. புனருத்தாரணம் அமர்க்களமாகியது.

இருப்பிட வசதி கூடியது. பொங்கலும் படையலும் பொலியத் தொடங்கின. காலை, மதியம், மாலையும் என முக்காலப் பூசையும் பாராயணமும் நடக்கிறது. ஆட்கள் கூடுகிறார்கள். ஆடலும் பாடலுமென ஒரே கொண்டாட்டமாகியது சூழல். போதாக்குறைக்கு அந்த நாள், இந்த நாள் என்று விசேட பூசைகளும் ஆராதனைகளும்.

முத்துமாரியாக இருந்தபோது, ஐம்பது ஆண்டுகளாக ஒரு சின்னஞ்சிறிய கொட்டகையில்தான் இருக்க வேண்டியிருந்தது. தினம் ஒரு வேளை மட்டுமே ஒரு பூசை. எப்போதாவது ஒரு விஷேசம் நடக்கும். அதுவும் சொல்லக் கூடிய அளவுக்குக் கொண்டாட்டமாக இருக்காது. அவரவராகவே வந்து, பொங்கிப் படைத்து, உண்டு, முடித்துச் செல்வார்கள். சிறிய வேண்டுதல்கள், பெரிய உருக்கம். ஆனாலும் ஒரு நெருக்கம் இருந்தது.

இப்பொழுது ராஜராஜேஸ்வரியோ, மிக விசாலமான இருப்பிடத்தில் சகல ஐஸ்வரியங்களோடும் அமர்ந்திருக்கிறார்.

இதைச் சரியாகச் சொல்ல வேண்டும். முத்துமாரி ராஜராஜேஸ்வரி ஆகினார் என்பதைவிட ராஜராஜேஸ்வரி ஆக்கப்பட்டார் என்று சொல்வதே சரியாகும். அதைப்போலவே, ராஜராஜேஸ்வரி சகல ஐஸ்வரியங்களோடும் அமரவில்லை. அமர்த்தப்பட்டிருக்கிறார். எல்லாமே மிகக் கச்சிதமாகச் செய்யப்பட்டுள்ளன.

இது எப்படி நடந்தது? என்று உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கக் கூடும். அது தொழில் ரகசியம். வேறொன்றுமில்லை, சனங்களுடைய அறிவின்மையைப் பயன்படுத்தி ஒரு சாரார் இதைச் செய்திருக்கிறார்கள். சரியாகச் சொன்னால், சனங்களின் மூடத்தனத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

சினிமாவில் விஜயலட்சுமி, ஸ்மிதாவாக்கப்பட்ட பிறகு புகழும் வாய்ப்பும் கூடியதைப்போல அல்லது அனு என்பவர் த்ரிஷா என்றாக்கப்பட்டதுக்குப் பிறகு புகழும் வசதியும் அதிகரித்தமாதிரி அல்லது மரியா என்ற பெண் நயன்தாரா எனவாக்கப்பட்டதற்குப் பின் பெருமைகளும் சிறப்பும் கூடியதைப்போல முத்துமாரியும் ராஜராஜேஸ்வரியாக்கப்பட்ட பிறகு கொடி பறக்கத் தொடங்கியது.

ஆமாம் எல்லாமே தொழிலுக்காகத்தான். கோயில் பராமரிப்பையும் பூசைகளையும் தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்வதற்காக பிராமணர்களால் செய்யப்பட்ட தந்திரம் இது. உண்மையில் இது ஒரு அடையாள அழிப்பாகும். சிறுதெய்வ வழிபாட்டை அழித்துப் பெருந்தெய்வப் பண்பாட்டுக்குள் மக்களைத் தள்ளுவதாகும். இதைப்பற்றிய ஒரு கதையை த.கலாமணி “வெளிச்சம்” இதழில் “வல்லமை தாராயோ!” என்ற தலைப்பில் 25 ஆண்டுகளுக்கு முன்பே எழுதியிருக்கிறார். அண்ணமார் தெய்வத்தை பிள்ளையாராக மாற்றப்படுவதே அந்தக் கதையாகும். இதேபோல ஜெயமோகனும் ஒரு கதையை எழுதியிருக்கிறார், “மாடன் மோட்சம்” என்ற தலைப்பில். மாடன் என்ற சிறுதெய்வம், பெருந்தெய்வமாக்கப்படுவதன் அரசியலை மிகுந்த அங்கதத்துடன் எழுதியிருக்கிறார் ஜெயமோகன். எல்லாமே அரசியல்தான். பொருளாதார நலனுக்கான அரசியல்.

நாம் இன அழிப்பைப்பற்றி, அடையாள அழிப்பைப்பற்றி, பண்பாட்டு அழிப்பைப்பற்றிப் பேசுகிறோம். அப்படியான அழிப்புகள் பல தரப்பாலும் பல வழிகளிலும் நடக்கின்றன. இந்த அழிப்பில் தனியே அரசாங்கம்தான் ஈடுபடுகிறது என்றில்லை. அல்லது சிங்களத் தரப்புத்தான் செய்கிறது என்று சொல்ல முடியாது. இதை இந்த மாதிரி சாதியாதிக்கச் சக்திகளும் செய்கின்றன. சில அடையாள அழிப்புகள் இனத்தின் பேரால் நடக்கிறது. சில மொழியின் பேரால். இது மதத்தின் பேரால்.

இங்கே நடப்பது மதத்தின் பேரால் நிகழ்கிறது - நிகழ்த்தப்படுகிறது.

சனங்களுக்கு ஆகம விதிகள் தெரியாது. லேசில் தத்துவம் புரியாது. எல்லோருக்கும் உபநிடதங்களில் பயிற்சியோ அறிவோ இல்லை. இந்து நாகரிகத்தை அல்லது இந்து சமயத்தை ஒரு பாடமாக பல்கலைக் கழகங்களில் ஆண்டு தோறும் படித்துப் பலர் வெளியேறுகிறார்கள். இந்தத் துறையில் படித்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பலர் உள்ளனர். இதைவிட சமய அறிஞர்களாக, பெரியோர்களாகப் பலர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் இருந்தாலும் எவரும் இந்த அடையாள அழிப்பைப் பற்றிப் பேசுவதுமில்லை. இதைக் கண்டிப்பதுமில்லை.

“ஐயரை எப்படிக் கேள்வி கேட்கலாம்?” என்பதே எல்லோருடைய தயக்கமுமாகும். ஐயர் ஒன்றும் கடவுளல்ல. “நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே” என்று சிவனைப் பார்த்து நக்கீரன் கேள்வி கேட்டதாகப் படித்திருக்கிறோம். “நாமார்க்கும் குடியல்லோம். நமனையும் அஞ்சோம்” என்ற திருநாவுக்கரசர் சொன்னதாகச் சொல்லிக் கொள்கிறோம். ஆனால், நாம் மட்டும் நமக்குத் தெரிந்த அநீதிக்கோ அடையாள அழிப்புக்கோ குரல் கொடுக்க முடியாமல் தடுமாறுகிறோம். ஒரு தெய்வத்தின் அடையாளத்தை மறைத்து, அழித்து இன்னொரு தெய்வமாக்கப்படுவதைப்பற்றிக் கேள்வி கேட்கத் தயங்குகிறோம்.

இது ஏன்?

எங்களுடைய தெருவில் மட்டும் முத்துமாரி அம்மன் என்ற சிறுதெய்வம் அழிக்கப்படவில்லை. வற்றாப்பளையில், மாத்தளையில், புளியம்பொக்கணையில், புதூரில், இயக்கச்சியில் எனப் பல இடங்களிலும் இத்தகைய அடையாள அழிப்புகள் நடந்துள்ளன. இன்னும் பல இடங்களில் தொடர்ந்தும் நடக்கின்றன.

தெய்வத்தையே மாற்றி விடுகிறார்கள் என்றால் அவர்கள் எப்படியான பேர்வழிகளாக இருப்பர்?

வரலாற்றில் இப்படிப் பல அடையாள அழிப்புகள் நடந்துள்ளன. வட இந்தியாவில் ராமர் கோயிலை அழித்து பாபர் மசூதி கட்டப்பட்டது என்று சொல்லப்படுகிறது. நல்லூரில் மசூதியை உடைத்தே கந்தசாமி கோயில் கட்டப்பட்டதாகச் சொல்வோருண்டு. கந்தசாமி கோயில் இருந்த இடத்தில் முத்திரைச் சந்தையில் கிறிஸ்தவ தேவாலயம் கட்டப்பட்டுள்ளது என்ற தகவல்களும் உள்ளது. சைவக் கோயில்கள் இருந்த இடங்களில் இப்பொழுது பௌத்த விகாரைகளை உருவாக்குவதற்கு முயற்சிகள் நடப்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

இதெல்லாம் வெளிப்படையான அரசியல் நடவடிக்கைகளின் விளைவுகள். ஆனால், நம்முடைய சூழலில் சத்தமில்லாமல் நடக்கிற - நடத்தப்படுகிற அடையாள அழிப்புக்கு என்ன பெயர்? இதுவும் அரசியல்தான்.

சிறுதெய்வ வழிபாட்டை அழித்து விட்டால், அந்த வழிபாட்டை மேற்கொண்ட சமூகத்தின் பண்பாட்டு வேரைச் சிதைத்து விடலாம். சிறுதெய்வ வழிபாடு என்பது ஏறக்குறைய சுதந்திரமானது. மக்கள் நேரடியாகவே தாங்கள் வழிபடுகின்ற கடவுளுடன் - தெய்வத்துடன் தொடர்புறுவர். அவர்களே அந்தத் தெய்வத்துக்கு பூசை செய்வர். அவர்களே அதைப் பராமரிப்பர். அவர்களே பொங்கிப் படைப்பர். அங்கே இடைத்தரகருக்கு இடமேயில்லை. இடைத்தரகருக்கு எதையும் தட்சிணையாகக் கொடுக்க வேண்டியதுமில்லை. தாங்கள் வெளியே நின்று விதிக்கப்படும் கட்டளைகளுக்குப் பணிய வேண்டியதுமில்லை.

சிறுதெய்வ வழிபாடென்பது, வழிபடும் பக்தருக்கும் கடவுளுக்கும் இடையில் தொடரும் மிக நெருக்கமான உறவை அடிப்படையாகக் கொண்டது. உலகத்திலுள்ள பெரும்பாலான மக்களின், மனநிலை, வாழ்க்கை. பொருளாதாரம், அரசியல் என்பவற்றை ஆட்டிப் படைக்கும் இந்தப் ‘பெருந்தெய்வ வழிபாடுகள்’ சிறுதெய்வ வழிபாடுகளிலிருந்து மருவியது என்கிறார்கள் ஆய்வாளர்கள். இதைத்தான் கண்ணுக்குத் தெரியாத அரசியல் (Invisible Politics) என்கிறோம்.

தமிழ்ப் பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிறுதெய்வ வழிபாடு என்பது, சிறுதெய்வங்களை வணங்கும் மக்கள், அவர்களுக்குத் தெரிந்த மொழியில் பாடுகிறார்கள். தெரிந்த கலைத்துவத்தை ஆடலாகவும் பாடலாகவும் சமர்ப்பிக்கிறார்கள். தாங்கள் உண்ணும் உணவை, உபயமாகக் கொடுக்கிறார்கள். தங்கள் பிரச்சினையைச் சொல்லி ‘குற்றத்தையும்’ சிலவேளைகளில், ‘தண்டனையையும்’ ஒப்புக் கொள்கிறார்கள். இந்தச் சடங்கு, உரு ஆடுதல், கட்டுச் சொல்லுதல் போன்றவையாகப் பரிணமிக்கும்.

இந்திய, இலங்கைத் தமிழர்களிடையே உள்ள சிறுதெய்வ வழிபாடுகள், குலதெய்வ வழிபாடுகள், நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு, காவற் தெய்வ வழிபாடு, எல்லைத் தெய்வ வழிபாடுகள் என்று பல விதத்தில் அழைக்கப்படுகின்றன.

தமிழர்களின் சிறுதெய்வ வழிபாட்டு முறைகள், தனித்துவமானவை. இயற்கையின் தத்துவங்களைப் பிரதிபலிப்பவை. மனிதத்தின் மாண்புகளைப் போற்றுபவை. முன்னோர்களுடைய வழிபாட்டின் நீட்சியாகவிருப்பவை, தனது சமூகத்தின் பூர்வீகத்தின் புனிதக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டவை.

இந்தத் தெய்வங்கள் ஒருகாலத்தில் அந்தக் கிராமத்து மக்களின் முன்னோராகும். தங்களுக்கு நன்மை செய்த தலைவனை வணங்கிய, தங்களுக்காகப் போராடி உயிர் நீத்த வீரர்களை வழிபட்ட,பெண்களுக்காகப் போராடிய பெண்களைத் தெய்வமாக்கிய தமிழரின் அடிவேர்களாகும். இவர்கள் கற்பனையல்ல. கட்டுக் கதைகள் அல்ல. இதிகாசத் திரிபுகள் அல்ல. இந்த வழிபாட்டு முறை அறம் சார்ந்த பாரம்பரியத்தைக் கொண்டது. சிறுதெய்வ வழிபாடு, தென் இந்தியாவுக்கு, ஜைனம், பௌத்தம், பிராமணியம் உள்ளிட முதலே கி.மு 8ஆம், 4ஆம் நூற்றாண்டுக ளுக்கு முன்னரே பரந்திருந்த வழிபாட்டு முறையாகும்.

இதைப்பற்றிய விரிவாக ஆய்வுகள் பலவும் நடத்தப்பட்டுள்ளன. இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன. “ஆரிய உள்ளீடு தமிழகத்தில் வந்ததால் சிறு தெய்வங்கள் ‘தீண்டத்தகாத’ கடவுளர்கள் ஆயின. அத்துடன் சில சிறுதெய்வ வழிபாட்டுத் தெய்வங்கள் பெருந்தெய்வங்களாக உருமாற்றம் செய்யப்பட்டன. பல்லாயிரம் ஆண்டுகள் பெயரும் புகழும் பெற்று வாழ்ந்த நாகரிகத்தையுடைய தமிழ் இனம், ஆரியரின் வருகையால் பெருமாற்றங்களைக் கண்டது. தமிழர்கள் அவர்கள் செய்யும் தொழில் முறையில் சாதி முறையில் பிரிக்கப்பட்டார்கள். பெரிய சாதிக்கடவுளர்கள் புதிதாக உருவாக்கப்பட்டார்கள். அவர்கள் பெரும்பாலும் ஆண்களாக விருந்தார்கள். வழிபாட்டு முறைகள் பிராமணயத்தின் முறையில் நகர்த்தப்பட்டன. அர்ச்சனை, விசேட பூசைகள் என்று புதிய வழிபாட்டு’ முறை கள் உருவெடுத்தது” என்கிறார் இது தொடர்பாக ஆய்வு செய்த ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம். இதுதான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. உண்மையில் இது பன்மைத்துவத்தை நிராகரிக்கும் செயலாகும். மக்களின் உரிமை மீறல்களில் இதுவும் ஒன்றாகும்.

மக்களுடைய வழிபாடுகள் பல வகையாக உள்ளன என்பதை நாம் அறிய வேண்டும். சமூக அடுக்குகள் எப்படிப் பல வகையாக இருந்தனவோ அதற்கமைய வழிபாடுகள் இருந்ததும் உண்டு. வீட்டுத் தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, இனத்தெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு எனப் பல வகைப்படுகின்றன. இன்று எல்லாவற்றையும் மெல்ல மெல்ல உட்கொண்டு பெருந்தெய்வ வழிபாடு வளர்கிறது.

இல்லையில்லை. வளர்க்கப்படுகிறது.இதற்குப் பின்னால் உள்ள அரசியல் சாதாரணமானதல்ல. அது நம்மைப் பலியெடுப்பது. இப்பொழுது அதற்கு நம்மை நாமே பலியிடுகிறோம்.





# தீர்வு குறித்த வாக்கெடுப்பு அவசியம்



வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

'தீர்வு' சாத்தான்கள் ஓதும் வேதம். 'அரசியல் தீர்வு' மீண்டும் பேசுபொருளாக வந்துள்ளது. ஐ.தே.க தலைவரும் ஜனாதிபதியுமான ரணில்விக்கிரமசிங்க அதனை தொடக்கி வைத்துள்ளார். வழமையாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐயா அவர்கள் ஒவ்வொரு புதுவருடத்தின் போதும் தீபாவளியின் போதும் பொங்கல் பண்டிகையின் போதும் தமிழ்மக்களுக்கு அரசியல் தீர்வு வருவதாக ஆரூடம் கூறிக்கொண்டிருந்தார். இந்த ஆரூடம் பலிக்காது போகவே சத்தமின்றி அதனை அவர் நிறுத்திக் கொண்டார். தற்போது சம்பந்தன் ஐயாவின் பாணியில் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க இவ்வருட தீபாவளி நாளில் தொடக்கி வைத்துள்ளார். ஜனாதிபதியைத் தொடர்ந்து பிரதமர் தினேஸ் குணவர்த்தனவும் தமிழர் பிரச்சினைக்கான தீர்வுக்கு இதுவே இறுதி சந்தர்ப்பம் என்றும் தமிழர் தரப்பு இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிடக் கூடாது என்றும் தமிழர் தரப்பிற்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

**கூட்டமைப்பு வரவேற்பு**

ஜனாதிபதியின் அரசியல் தீர்வு குறித்த அறிவிப்பு வந்தவுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி வரவேற்று ஜனாதிபதியின் முயற்சிக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தீபாவளி நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசனும் வரவேற்பதாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் அரசியல் தீர்வு குறித்த விடயத்தில் மலையகம் குறித்தும் கவனம் செலுத்துமாறும் தீர்வுப் பொதிக்குள் மலையகத்தையும் உள்ளடக்குமாறும் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டதாக மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு புதிய அரசமைப்பு மூலம் கிடைக்கும். ஒருவருடத்திற்குள் இந்தப் பணிகள் முற்றுப்பெறவேண்டும் என்பதே எனது நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வு புதிய அரசியலமைப்பின் மூலம் கிடைக்கும். இது தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியும் வருகின்றேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மொத்தத்தில் ரணில் - மஹிந்த தரப்பினர் தமக்கான அரசியல் நிகழ்ச்சி நிரலை நோக்கி காய்களை நகர்த்தத் தொடங்கிவிட்டனர்.

தீர்வை முன்வையுங்கள் என்றால் தமிழர் தரப்பு கோபித்துக் கொள்கின்றது. தீர்வை முன்வைத்து இனவிவகாரத்துக்குத் தீர்வு காணுங்கள் என்று அரசாங்கத்தரப்பிடமும் தென்னிலங்கை சக்திகளிடமும் கோரிக்கை முன்வைத்தால் தமிழர் தரப்பு இனவாதத்தை வளர்ப்பதாகவும் நாட்டைப் பிளவுபடுத்த முயல்வதாகவும் கண்டனக் கருத்துகள் சீறிப் பாய்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் தீர்வை முன்வைத்து இனவிவகாரத்துக்கு முடிவு கட்டி தென்னிலங்கை பேசுகின்ற 'தமிழ்ப் பயங்கரவாதத்தை ஓரம் கட்டுங்கள் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டபோது தமிழ்ப் பத்திரிகையாளர் மீது புலி முத்திரை குத்தப்பட்டது.

அமைதி திரும்பியதாகக் கூறப்படும் இன்றைய நிலையிலும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷை, அதிகாரப் பகிர்வு என்பன குறித்துப் பேசினால் அது நாடு பிளவுபடுவதற்கு வழிவகுப்பதாக குற்றம் சுமத்தப்படுகின்றது. ஏனெனில், தென்னிலங்கையின் கருத்தியலில் தமிழ் மக்கள் கொண்டுள்ள அரசியல் அபிலாஷை, அதிகாரப் பகிர்வுகுறித்த கோரிக்கை என்பன பிரிவினைவாதமாகச் சித்தரிக்கப்படுகின்றது.

பிரிவினைவாத முத்திரை குத்தப்படுகின்றது என்பதற்காக தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளை விட்டுக் கொடுப்பதற்கோ அல்லது தமது அதிகாரப் பகிர்வு குறித்த கோரிக்கையை சலுகை அரசியலுக்காக தாரைவார்த்துக் கொடுக்கவோ தயாராக இல்லை என்பதை தமிழ் மக்கள் தமது அரசியல் பயணத்தில் பலமுறை பதிவு செய்துள்ளனர்.

இதனை மையமாக வைத்தே அரசியல் தீர்வுப் பொதியை தமிழ்த் தலைமைத்துவங்கள் முன்வைக்க வேண்டும், அரசாங்கத்தரப்புடன் பேச்சு வார்த்தைக்குச் செல்லும்போது தமிழர் தரப்பு வெறும் கையுடன் பேச்சு வார்த்தை மேசைக்கு செல்லாது தீர்வுப் பொதியுடன் செல்ல வேண்டுமென எனது அரசியல் பத்தியில் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கை சில தமிழ்த் தலைமைத்துவங்களுக்கு எரிச்சல் ஊட்டுவதாக அவ்வேளையில் இருந்தது.

கடந்த பத்து வருடங்களுக்கு முன் (10.02.2012) அன்று பழம்பெரும் தமிழ்க் கட்சியொன்றின் மூத்த, பழுத்த அரசியல்வாதியுமான ஒரு புத்திஜீவி இவ்வாறு தெரிவித்தார்.

தீர்வுகுறித்த பொதி இன்றி தமிழ் தலைமைத்துவங்கள்

'இன்றைய தமிழ்த் தலைமைகளிடம் அரசியல் தீர்வுகுறித்த எந்தவிதமான யோசனைகளும் அவர்கள் கைவசம் இல்லை. தீர்வு இருப்பதாக கூட்டங்களிலும் ஊடகங்களிலும் கூறினாலும்கூட அந்த ஆவணத்தைக் காட்டுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. மக்களை முட்டாள்களாக்கி தொடர்ந்தும் 'கதிரை அரசியல்' நடத்த முனைகின்றனர் என்று தெரிவித்தார்.

அத்துடன் அவர் நின்றுவிடவில்லை இன்றைய தமிழ் தலைமைத்துவ பரம்பரை தமிழர் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்ள வேண்டும். உழைப்பதற்கல்ல அரசியல் மக்களின் சேவைக்கே அரசியல் தேவை என்ற அடிப்படையில் மக்களுக்காக இதய சுத்தியுடன் பணியாற்றக் கூடியவர்களின் அரசியல் பிரவேசமே இன்றைக்குத் தேவை. ஏனெனில், இன்றைய தமிழ்த் தலைமைத்துவங்கள் அநாதைகளாக்கப்பட்டுள்ள தமிழ்ச் சமூகத்தை மீட்கும் நிலையில் இல்லை என்றும் தெரிவித்தார்.

2012 இல் தமிழர் தரப்பில் கூறப்பட்ட கருத்தியலைத்தான் இன்று தென்னிலங்கை மாற்றத்தை விரும்பும் சக்திகளான 'அரகலய' பேசுகின்றது.

2009 இல் போர் மௌனிக்கப்பட்ட பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக மார்தட்டிக் கொண்டிருந்த வேளை 2012 ஆம் ஆண்டு மேற்கூறிய வார்த்தைகள் வெளிவந்திருந்தன. அதற்குப் பிறகு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடன் இன விவகாரத் தீர்வுக்கென பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியது. இறுதியில் பேச்சு வார்த்தை வெற்றி அளிக்கவில்லை, ஒரு அங்குலம்தானும் நகர

(19 ஆம் பக்கம் பார்க்க...)

விடுதலை அல்லது கைவல்யம் என்றால் என்ன? என்பதற்கான பதிலை பலரும் பலவிதமாகக் கூறுவார்கள். கைதிக்கு சிறையை விட்டு வெளியேறுவது விடுதலை. நிலத்தை மீட்பது அல்லது காப்பது இனங்களுக்கு விடுதலை என்று கருதப்படுகிறது. திருமண பந்தத்தில் இணைவது ஒருவனுக்கு விடுதலை, இதுவே இன்னொருவனுக்கு திருமண பந்தத்தை முறித்துக் கொள்வது விடுதலை. இத்தகைய கால, இடங்களோடு பொருள் மாறும் விடுதலை உண்மையான விடுதலை ஆகிவிடாது.

தனது உணர்வு நிலையை மனம், உடல் என்ற கூட்டுக்குள் அடைத்து சிதைவுறுகிறது மனித இனம். குரங்கிலிருந்து மனிதனானதுடன் பரிணாமம் முடிந்து விட்டதாகக் கருதுகிறது மனிதம். அவ்வப்போது மிருக நிலைக்கு வேறு சென்று வருகிறது. மனித நிலையிலிருந்து இறை நிலைக்கு பரிணாமத்தின் தொடர்ச்சி உள்ளதை மனிதத்தின் பெரும் பகுதி அறியாதுள்ளது. இன்பம்-துன்பம், உயர்வு-தாழ்வு, பிறப்பு-இறப்பு, நல்லது-கெட்டது போன்ற பல இருமைகளில் மனித குலம் சிக்கியிருப்பதற்கு மனம், உடல் என்ற கூட்டுக்குள் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதே காரணமாகிறது. இந்த

**அங்குஆகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்**
**படமாடக் கோயில் பகவற்கு அதுஆமே**

சக மனிதன் பசியில் இருக்க, இறைவனுக்கு இடும் படையல், அந்த மனிதனுக்குச் சென்று சேராது. ஆனால், நடமாடும் கோயிலான பசித்த மானிடத்திற்கு நாம் உதவினால் அது படமாட கோயிலான இறைவனுக்கு

திட்டங்களை வெளிப்படுத்துவதிலும் செயற்படுத்துவதிலும் ஈடுபடுவதை பாராட்டியே ஆக வேண்டும்.

நான் உடல், மனம் என்ற கூட்டுக்குள் சிந்தனை இருக்கும் வரை விடுதலை சாத்தியமில்லை. இந்தக் கூட்டுக்குள் இருந்து நம்மை வெளியேற்றும் உணர்வு நிலையைத் தரும் ஆன்மிக நிலையே உண்மையான விடுதலை. பதஞ்சலி முனிவர், திருமூலர், கிரியா பாபாஜி

பான்மையான மக்களுக்குச் சென்று சேரும் போது நாம் எதிர்பார்க்கும் நேர்மறையான மாற்றங்களை சமுதாயத்தில் காணமுடியும்.

ஒரு யோகியானவன் பிரபஞ்ச சக்தியின் ஆற்றலினாலும் அறிவினாலும் சகல சித்திகளைப் பெற்றும் அந்தச் சித்திகளின் தாக்கங்களில் இருந்தும் பயன்களில் இருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ளும் போது உண்மையான விடுதலை அல்லது கைவல்யம் கிடைக்கிறது. கைவல்யம் என்பது தான் வேறு என்ற நிலை தாண்டிய ஒற்றாதல். இந்த நிலை நமக்கு மேலான சக்தியைப் பற்றிய ஞானம் அல்ல, அதனையும் தாண்டிய அந்தச் சக்தியுடன் ஒற்றாகிய நிலை. சொற்களில் விபரிக்க கடினமான நிலை இது. தன் சகல அடையாளங்களையும் சித்திகள் மீதான பிடிப்பையும் இழந்த நிலை.



சென்று சேரும் என்கிறார்.

இத்தகைய மனநிலையை எய்துவதற்கான ஆன்மிக வளர்ச்சி மனித குலத்திற்கு தேவையாக உள்ளது. அதற்கு பக்தி மார்க்கம் மட்டும் போதுமானதாக இல்லை என்பதையே உலகமெங்கும் அதிகரித்து வரும் அமைதியின்மையும் பொருளாதார வீழ்ச்சியும் காட்டி நிற்கிறது.

போன்ற யோக சித்தர்கள் அருளிய கிரியா யோகம், அட்டாங்க யோகம் வழி தன்னை உணர்தலே நிரந்தரமான விடுதலையைப் பெற்றுத்தரும். இந்த விடுதலைக்குப் பாதை போடும் பதஞ்சலி யோக சூத்திரத்தின் இறுதிப்பகுதி, கைவல்ய பாதம் எனப் பொருத்தமாக பெயரிடப்பட்டுள்ளது.

உண்மையான இந்த விடுதலை

**'நான்என்றும் தான்என்றும் நாடிநான் சாரவே**
**தான்என்று நான்என்று இரண்டிலாத் தற்பதம்**
**தான்என்று நான்என்ற தத்துவம் நல்கலால்**
**தான்என்றும் நான்என்னும் சாற்று கில்லேனே'**

**திருமந்திரம் 1441**

நான் தேடி அடைய வேண்டியது, இரண்டில்லாத பரம்பொருள் இறை

# பதஞ்சலி யோக சூத்திரத் தொடர்

# கைவல்ய பாதம் (விடுதலை)

அறியாமையினால்த்தான் அரசியல் சீரழிவுகள், சமுதாய ஏற்றத் தாழ்வுகள், மனச்சிக்கல்களினால் உடலில் வெளிப்படும் நோய்களின் பெருக்கம், போர் போன்றவற்றை கண்முன்னால் காண்கிறோம். பெரும்பாலான சமயத் தலைவர்களுக்குக்கூட உண்மையான ஆன்மிக தெளிவின்மையால் சமுதாயத்திற்கு வழிகாட்டிவிட முடியவில்லை. மதவாதிகளின் கொள்கையானது தமது ஆன்மிக அவதார புருசர்களினால் கூறப்பட்ட தன்னை உணர்தலுக்கான பாடல்களை, உரைகளை நூல் வடிவில் காலாகாலமாகக் கொண்டு சென்று மதமாகப் பரப்புவதில் இருக்கும் ஆர்வம், அவற்றில் கூறப்பட்டவற்றின் உண்மையை உணர்ந்து தானும் அத்தகைய நிலையை எய்தி, மக்களின் அறியாமையைப் போக்குவதில் இல்லை. எமது ஆன்மிக மார்க்கம் பெரும்பாலும் பக்தி சார்ந்ததாக மட்டுமே உள்ளது. இதனாலேயே ஆன்மிக முன்னேற்றம் மந்தகதியில் உள்ளது. வணக்க தலங்களை புதுப்பித்தல், அழகுபடுத்தல், பிற மதத்தவரிடமிருந்து பாதுகாத்தல் போன்றவற்றை எமது மதம் என்ற குறுகிய வட்டத்துக்குள் இருந்து செய்து வருகிறோம். இதற்கும் மேலாக வழிபாட்டுத் தலங்களை நிர்வகிப்பதில் ஏற்படும் சிக்கல்கள் என்று ஆன்மிகத்திற்கு சிறிதும் சம்பந்தமில்லாத விடயங்களில் செலவிடப்படும் எமது பிராண சக்தியானது தன்னை உணர்வதற்கும் செலவாகும் பணமானது எமது சக மனிதர்களின் பசியினைத் தீர்க்கவும் கூடியது என்ற அடிப்படை அறிவைக்கூட மதங்களினால் தர முடியவில்லை. இங்கே சித்தர் திருமூலரின் பாடல் ஒன்றை கூறுவது பொருத்தமாக இருக்கும்.

**படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு**

தன்னைப் பூரணமாக உணரும் யோக மார்க்கத்தின் மூலமே 'அன்பே சிவம்' எனும் தத்துவத்தை உணர்ந்து, சக சமூகத்திற்கும் நாட்டிற்கும் தேவையான, உண்மையான முன்னேற்றத்தை வழங்க முடியும். இத்தகைய யோக மார்க்கத்தின் அடிப்படியான கல்வியை மாணவர்களுக்குகல்வித் திட்டத்தில் இணைத்து தினமும் வழங்குவதன் மூலம் கல்வியில் முன்னேற்றத்தையும், நாட்டின் எதிர்காலத்தில் சிறப்பான பங்களிப்பை வழங்கும் சந்ததியையும் உருவாக்க முடியும். தற்காலத்தில் எழுந்துள்ள போதைப் பொருள் பாவனை இந்த மாற்றத்திற்கான உடனடித் தேவையை உணர்த்தி நிற்கிறது.

இத்தகைய மாற்றங்களுக்கு நாமும் தலைவர்களும் தயாராக இல்லை. இதனால்த்தான் மக்களிடையே நம்பிக்கையீனம் பெருகியிருக்கிறது. இத்தகைய சமுதாயத்தில் இருந்து வரும் எழுத்தாளர்களினாலும் கவிஞர்களினாலும் இல்லாத ஒரு காலமான இறந்த காலத்தின் வடுக்களும் துன்பங்களும் என்றும் புனைவுகளாகப் பெரும்பாலும் பதியப்படுகின்றன. எதிர்மறையான பதிவுகளே சமூக வலைத்தளங்களின் பக்கங்களை நிரப்புகின்றன. நம்பிக்கையூட்டும் சிலர் நிகழ்கால, எதிர்காலத்



**முரளீதரன் நவரத்தினம்**
MSc in Yoga **(அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்)**

உணர்வை விளங்கிக் கொண்ட ஒரு சமுதாயத்தின் அரசியல், பொருளாதார, சமூக அமைப்பு எப்படி இருக்கும் என்பதை தற்போதைய சூழ்நிலையில் கற்பனை செய்து மட்டுமே பார்க்க முடியும். சிறுபான்மையாக இருக்கும் இந்த ஆன்மிக வலு பெரும்

வன் திருவருள் துணையே என்று உணர்ந்து, தான் என்பது நீயேதான் எனும் உண்மையை உணரச் செய்ததால், ஒன்றாகிய அந்த பரிபக்குவம் பெற்றேனே. ■

முருகபூபதி



10 முதல் சந்திப்பு

# ஐந்து வயதில் சந்தித்த மூத்த எழுத்தாளர் தொ.மு.சி.ரகுநாதன்

பெரும்பாலான எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களை எனது எழுத்துலகப் பிரவேசத்தின் பின்னர்தான் நேருக்கு நேர் சந்தித்திருக்கின்றேன்.

இந்தச் சந்திப்புகளுக்கு தற்போது அரை நூற்றாண்டு காலமாகிறது.

மேலதிக தகவல் நான் 1972 இல்தான் எழுத்துத் துறைக்குள் வந்தேன்.

அதற்கு முன்னர் இரண்டு தமிழக பிரபல எழுத்தாளர்களை முதன் முதலில் எனது ஐந்து வயதிலும் பத்துவயதிலும்தான் பார்த்திருக்கின்றேன்.

அவர்கள்தான் இலக்கிய சகோதரர்கள் தொ.மு.பாஸ்கரத் தொண்டமான், தொ.மு. சிதம்பர ரகுநாதன்.

மூத்தவர் தமிழ்நாடு பாளையங்கோட்டையில் மாவட்ட ஆட்சித் தலைவராக விருந்த ஐ.ஏ.எஸ்.அதிகாரி கல்கி கிருஷ்ண மூர்த்தி மற்றும் இரசிகமணி டி.கே.சி ஆகியோரின் நெருங்கிய நண்பர்.

அத்துடன் ஆனந்தவிகடன், கல்கி முதலான இதழ்களில் இந்திய திருத்தலங்கள் பற்றிய தொடர்களை எழுதியவர். இவர்தான் இலங்கை வந்த சமயத்தில் காரைநகர் சிவன் கோயிலுக்கு ஈழத்து சிதம்பரம் என்ற பெயரையும் சூட்டியவர். காங்கிரஸ் கட்சியிலிருந்த காந்தீயவாதி.

இவரது தம்பியான தொ.மு.சிதம்பர ரகுநாதன்தான் முதலில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் அழைப்பில் 1956 ஆம் ஆண்டு நாடெங்கும் நடந்த பாரதி விழாக்களில் கலந்துகொண்ட எழுத்தாளர், பேச்சாளர்.

முதலில் காங்கிரஸ் தொண்டராகவிருந்து, இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைவாசமும் அனுபவித்தவர்.

பின்னர் இடதுசாரிச் சிந்தனையாளராக மாறியதுடன், சோவியத் இலக்கிய மேதை மாக்ஸிம் கோர்க்கியின் தாய் நாவலையும் தமிழுக்கு மொழிபெயர்த்தார். இதனை பெரும்பாலான முற்போக்கு எழுத்தாளர்கள் படித்துவிட்டே தங்கள் இலக்கியப் பயணத்தைத் தொடர்ந்திருப்பார்கள்.

தினமணி பத்திரிகையில் ரகுநாதன் பணியாற்றிய காலத்தில்தான் புதுமைப்பித்தன் இவருக்கு அறிமுகமாகிறார். அன்று முதல் நெருங்கிய நண்பர்களானார்கள்.

புதுமைப்பித்தன் வரலாறு எழுதியவர் ரகுநாதன். அத்துடன் பஞ்சும் பசியும், கன்னிகா, முதல் இரவு, புயல் முதலான நாவல்களையும் சேற்றில் மலர்ந்த செந்தாமரை முதலான கதைத் தொகுதிகளையும் எழுதியிருப்பவர்.

குடும்பச்சொத்தில் ரகுநாதனுக்குக்கிடைத்த பங்குப் பணத்தில் சாந்தி என்ற இலக்கிய இதழையும் நடத்தினார். இதில்தான் ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி முதலான பின்னாளில் பிரபலம் பெற்ற எழுத்தாளர்களின் ஆரம்ப காலச் சிறுகதைகள் வெளிவந்தன.

ரகுநாதனை நோக்கி நான் நெருங்கியபோது எனக்கு 31 வயது. அப்போது மகாகவி பாரதி பிறந்த நூற்றாண்டு ஆரம்பமாகியிருந்தது.

1956 ஆம் ஆண்டு இவர் இலங்கை வந்தபோது எம்மைத்தேடி எமது நீர்கொழும்பூர் வீட்டுக்கு வந்தார். இவர் எனது அப்பா வழியில் நெருங்கிய உறவினர். அப்பாவுக்கு மாமா. எனக்கு தாத்தா.

சிறுகதை, நாவல், கவிதை என எழுதிக்கொண்டிருந்த ரகுநாதன், மொழிபெயர்ப்பாளராகவும் ஆய்வாளராகவும் மாறினார். அதனால் எமக்கு ரஷ்ய இலக்கியங்கள் எழுதிய லியோ ரோல்ஸ்ரோய், மாக்ஸிம் கோர்க்கி, புஷ்கின், விளாதிமிரோவிச் மயக்கோவ்ஸ்கி முதலானோர் தமிழுக்கு அறிமுகமானார்கள்.

ரகுநாதன், பின்னாளில் பாரதி இயல் ஆய்வாளராக மாறினார். அதனால் எமக்கு பாரதியும் ஷெல்லியும், கங்கையும் காவிரியும், பாரதி: காலமும் கருத்தும், பாரதியும் புரட்சி இயக்கமும், பாரதியின் பாஞ்சாலி சபதம் : உறைபொருளும் மறைபொருளும் முதலான நூல்கள் வரவாகின. இவற்றுள் பாரதி: காலமும் கருத்தும், இந்திய சாகித்திய அக்கடமி விருதினைப்பெற்றது.

இத்தகைய ஒப்பீட்டு ஆய்வு நூல்களே தமிழகப் பல்கலைக்கழகங்களில் ஒப்பியல் இலக்கியம் என்ற ஆய்வுத்துறையை உருவாக்குவதற்கும் வழிகோலியது என்ற கருத்தும் நிலவுகிறது. ரகுநாதனின் புதல்வர் ஹரீந்திரனின் மனைவி மாலதி (இவர் எனக்கு அண்ணி முறையானவர்) தமது பட்ட மேற்படிப்பிற்காக தனது மாமனாரின் படைப்புகளையே ஆய்வுக்கு எடுத்துக் கொண்டார்.

"குடும்பத்திற்கு வரும் மருமகளை மாமனார்தான் அக்கறையோடு அவதானிப்பார், ஆனால், இங்கே மாமனாரின் படைப்புகளையே மரும கள் ஆய்வு செய்துள்ளார்" என்று தமிழக இதழ் ஒன்று கவர் ஸ்ரோரி எழுதியிருந்தது.

எனினும் கவிஞருமான மாலதியின் கவிதை நூலுக்கு கவியரசர் கண்ணதாசன்தான் அணிந்துரை எழுதினார்.

ரகுநாதனுக்கு சோவியத் லாண்ட் நேரு விருதும் கிடைத்திருக்கிறது.

இளங்கோவடிகள் யார்? என்ற ரகுநாதனின் நூல் எண்ணூறு பக்கங்களைக் கொண்டது. சிலப்பதிகாரம் தொடர்பாக காலம் காலமாகப் பேசப்பட்டுவந்த கதைகளுக்கு எதிர்வினையாகவும் இந்த நூல் பேசப்பட்டது.

"சிலப்பதிகாரம் பற்றி மரபுவழியான கருத்துப் படிமங்களைத் தகர்த்தெறிந்த நூல்தான் இளங்கோவடிகள் யார்? என்ற ஆய்வு நூல்" என்று பேராசிரியர் எஸ்.தோதாத்திரி எழுதியுள்ளார்.

தமிழ்நாடு திருநெல்வேலி பிரதேசத்தில் வாழ்ந்த கைத்தறி நெசவாளர்களின் போராட்ட வாழ்வை சித்திரித்த ரகுநாதனின் பஞ்சும் பசியும் நாவல், செக் மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டு, அந்த நாட்டில் அக்காலத்திலேயே ஐம்பதினாயிரம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகியிருக்கிறது. பஞ்சும் பசியும் நாவலை, காமிஸ்வலபில் என்ற புகழ்பெற்ற எழுத்தாளரினால் செக் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது.

பஞ்சும் பசியும் நாவலை எமது இலங்கைப் பேராசிரியர் க.கைலாசபதி, தான் எழுதிய தமிழ் நாவல் இலக்கியம் நூலில் சோஷலிஸ யதார்த்தப் பார்வையுள்ள படைப்பு என சிலாகித்துள்ளார்.

1956 ஆம் ஆண்டு ரகுநாதன் இலங்கை வந்தபோது, அவர் எம்மைத்தேடி வந்து, விடுபட்டுப்போன எமது அப்பா வழி உறவுக்கு உயிர்ப்பளித்தார்.

அவரைத்தொடர்ந்து 1961 இல் இலங்கை வந்த, இவரது அண்ணன் பாஸ்கரத் தொண்டமான், எங்கள் வீட்டுக்கும் வந்து, உறவை மேலும் பலப்படுத்தினார்.

1972 ஆம் ஆண்டுக்குப்பின்னர் இலக்கியப்பிரவேசம் செய்து, 1973 இல் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் ஐக்கியமாகியதையடுத்து, ரகுநாதனுடன் கடிதத் தொடர்புகளை மேற்கொண்டேன்.

1982 இல் பாரதி பிறந்த நூற்றாண்டு தொடங்கியதும் சங்கத்தின் பாரதி நூற்றாண்டு விழாக் குழுவிலும் அங்கம் வகித்தேன். 1983 ஆம் ஆண்டு தொடக்கத்தில் சங்கம் பாரதி இயல் ஆய்வாளர் ரகுநாதன், பேராசிரியர் எஸ். இராமகிருஷ்ணன், எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் ஆகியோரை இலங்கைக்கு அழைத்திருந்தது.

இவர்களுடன் வடக்கிற்கும் கிழக்கிற்கும் இலக்கியப்பயணங்கள் மேற்கொண்டேன். இலங்கையில் நடந்த பாரதி நூற்றாண்டு விழாக்கள் பற்றி நான் எழுதிய கட்டுரையையும் ரகுநாதன், தமிழ்நாடு தாமரை இதழில் வெளியிட்டார். 1923 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி பிறந்த ரகுநாதன், 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி மறைந்தார்.

2002 இல் வெளியான எனது 'பறவைகள்' நாவலை ரகுநாதனுக்கே சமர்ப்பித்துள்ளேன். ரகுநாதனின் பிறந்த நூற்றாண்டு இந்த மாதத்திலிருந்து ஆரம்பமாகிறது. ■





அம்பலவாணர் துரைசிங்கம்

# ஆங்கில மொழியின் முக்கியத்துவமும் சில நுட்பங்களும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

உயர் வகுப்புகளில் மாணவர்கள் முறைசார் மற்றும் முறைசாரா நிலைமைகளில் பேச்சு மற்றும் நீண்ட அறிக்கைகள், குழு விவாதங்கள், வகுப்பு மற்றும் பாடசாலைமட்ட நாடகங்களில் அறிவைப் பெற்றுக்கொள்கின்றனர். அதற்கு மேலும் விசேட மொழிப் பயிற்சி மொழித் தோற்றம் தொடர்பில் அறிந்துகொள்கின்றனர். இன்றைய உலகில் எங்கு சென்றாலும் ஆங்கில மொழியின் பிரசன்னத்தைக் காணமுடியும். ஒவ்வொருவரின் வாழ்விலும் ஆங்கில மொழி முக்கிய பங்கினை வகிக்கின்றது. உதாரணமாக “ரியூஷன்” (Tuition) எனும் ஆங்கிலச் சொல் பல்வேறுபட்ட மொழி பேசுபவர்களாலும் உச்சரிக்கப்படுவதனை அவதானிக்கலாம். ஆங்கில மொழி தொடர்பாடல், வர்த்தகம், பொழுதுபோக்கு வேறு எந்த தொழில்துறையாக இருந்தாலும் ஆதிக்கம் செலுத்துவதனை கண்கூடாகக் காண்கின்றோம்.

ஆங்கில மொழியானது உலகிலே 40ற்கும் மேற்பட்ட நாடுகளில் உத்தியோகபூர்வ மொழியாகப் பயன்படுத்தப்படுவதுடன் எமது நாட்டிலும் பிரதான தொடர்புமொழியாக உள்ளது. அன்றும் சரி இன்றும் சரி உயர் பதவி வகிப்பவர்கள் சமூகத்தில் மதிக்கப்படுவதற்கான காரணம் அவர்களின் ஆங்கில மொழித் திறமையே. தற்போதைய காலகட்டத்தில் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் ஆங்கில மொழி கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளதுடன் சர்வதேச அளவிலும் எமது திறமையை விருத்திசெய்ய அவசியமாகின்றது.

பல்கலைக்கழக கற்கை நெறிகளில் 70% மானவை ஆங்கில மொழியில் போதிக்கப்படுவதால் பல்கலைக்கழகம் செல்லவுள்ள மாணவர்கள் ஆங்கிலக்கல்வியினை விரும்பிக் கற்க வேண்டும். அதைவிட க.பொ.த சாதாரண தர பரீட்சையில் ஆங்கில மொழி தொடர்பில் செவிமடுத்தல் மற்றும் பேசுதல் தொடர்பாகவும் மாணவர்கள் பரீட்சிக்கப்படவுள்ளதாக அறியக்கிடைக்கின்றது.

அடிப்படையில் சரளமான ஆங்கில மொழிக்கு தொடர்பான செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல் ஆகிய திறன்களை சிறு பராயத்திலிருந்தே உரிய முறையில் கற்றுக்கொள்ள வேண்டியது மாணவர்களின் கடமையாவதுடன் இவ்விடயம் தொடர்பில் உரிய வழிகாட்டல் மற்றும் உதவிகளை வழங்குவது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் மகத்தான கடமையாகும். ஒருவர் ஆங்கில மொழியில் உரையாடும்போது அவரின் ஆளுமை பற்றி அவதானிக்கப்படுகிறது.

மாணவர்கள் பேசுவது தொடர்பாக ஆரம்பத்தில் ஏற்படும் சிறிய தவறுகள் பற்றி கவலைப்படாமல் எவ்வளவுக்கு எவ்வளவு முயற்சிசெய்கிறார்களோ அவர்களுக்கு வெற்றி நிச்சயம். உலகில் எவரும் எந்தத் துறையிலும் தவறுகள் விடாமல் முன்னேறியவர்கள் இல்லை. அப்படியொருவர் கூறுவாரானால் அவர் பொய் கூறுகிறார் என்று அர்த்தம். ஒருவர் தான் பேசும் போது, எழுதும் போது தவறு ஏற்படுவதை உணர்ந்தார் என்று சொன்னால் அவர் அம் மொழியில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்று அர்த்தம்.

மேடைப்பேச்சின்போது பேச்சானது திட்டமிடப்பட்டு தயாரிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் பேசும் விடயம் தொடர்பாகவும் கேட்போர் தொடர்பாகவும் போதிய அறிவிருத்தல் முக்கியம். மேடைப்பேச்சின் போது பேசுபவரின் கண்கள் அடிக்கடி அவையோரின் கண்களைச் சந்திக்கவேண்டும். பேச்சு பயனுறுதியாக அமைவதற்கு இச்செயற்பாடு முக்கியம்.

**வாசித்தல்**

20 ஆம் நூற்றாண்டில் பேச்சுமொழியானது வானொலி, தொலைக்காட்சி, அசையும் படங்கள் மூலம் அபிவிருத்தியடைந்தபோதும் புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் புதினப் பத்திரிகைகள் ஒருவரது எண்ணங்கள், உணர்வுகள் தொடர்பில் அதிகளவு ஆதிக்கம் செலுத்துகின்றன. எனவே, வாசிப்பு என்பது ஒரு முக்கிய கலையாக கற்றறிந்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வாசிப்பானது எல்லா நேரத்திலும் எல்லா வயதினருக்கும் மிகுந்த அறிவினை வழங்குகின்றது. இன்றைய காலகட்டத்தில் வாசிப்பானது சமூக பொருளாதார வளர்ச்சிக்கு துணைபுரிகின்றது. ஒருவரது ஆற்றலை அதிகரிப்பதற்கும் சமூகத்தில் வெற்றியடைவதற்கும் வாசிக்கும் திறன் அவசியம். கல்வியியல் ஆராய்ச்சியாளர்கள் வாசித்தலுக்கும் கல்வியில் வெற்றி பெறுதலுக்கும் உறுதியான தொடர்புள்ளதாகத் தெரிவிக்கின்றனர். பரிச்சயமான வாசிப்பாளர்கள் ஒரு விடயத்தினை வாசித்தவுடன் அதன் கருப்பொருளினை இலகுவில் புரிந்து கொள்கின்றனர். வாசிப்பதன் மூலம் ஒருவர் தனது சிந்திக்கும் திறன், விளங்கிக்கொள்ளும் தன்மை கருத்துகளை வெளியிடும் திறன் போன்றவற்றினை வளர்த்துக்கொள்ள முடியும். எனவே மாணவர்கள் பின்வரும் வழிமுறைகளைக் கையாளலாம்.

1. தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் உரத்து வாசித்தல்.

2. காகிதத் தாளில் முக்கியமான விடயத்தினை எழுதி அதனை திரும்பத் திரும்ப வாசித்தல்.

3. செய்யுட்கள் பாடல்களை மனப்பாடம் செய்து ஒப்புவித்தல்.

4. செவிப்புல ஒலிப்பதிவு நாடாக்கள் மூலம் கல்வி சம்பந்தமான அறிவினை செவிமடுத்தல்.

**எழுதுதல்**

முற்காலத்தில் பாடசாலைகளில் எழுதுவதற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. வழமையில் ஒரு பிள்ளையானது ஆங்கில மொழியில் தனது பெயரை முதலில் பெரிய எழுத்துகளிலும் பின்பு தொடுத்து எழுதும் முறையிலும் எழுதப்பழகுவது இயல்பு அதன் பின்பு வேறு பொருட்களின் பெயர்கள், சிறிய வசனங்கள் மற்றும் பாடப்புத்தகங்களிலுள்ள கேள்விகளுக்கு குறுகிய பதில்களை எழுதிப் பழகுவர். ஆக்க எழுத்துப் பயிற்சி, ஆசிரியர் சொல்வதைச் செவிமடுத்து எழுதப் பழகுவர், படிப்படியாக சொற்தெரிவு நீண்ட வசன அமைப்பு மற்றும் பந்தியமைத்தலில் பயிற்சி பெறுவர். ஆங்கில மொழியைப் பொறுத்தவரையில் அகராதிப்பயன்பாடு மிகவும் முக்கியம் வாய்ந்தது அதனுடன் எழுத்துகளையும் உரிய முறையில் அழகாக எழுதுதல் சாலச்சிறந்தது. பரீட்சைகளின் போதுகூட அழகான கையெழுத்து கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு வாய்ப்புண்டு. ஏனெனில், அழகினை ரசிப்பது மனித இயல்பாகும். எழுதும் விடயம் தெளிவாகவும் சுருக்கமாகவும் நேரடிப் பொருளைக் கொடுப்பதாகவும் ரசனையுடையதாகவும் அமைதல் வேண்டும்.

ஒவ்வொரு பாடத்திலும் குறிப்பிட்ட விடயங்கள் மாணவரைப் பொறுத்த வரையில் மனப்பாடம் செய்தல் வேண்டும். அவையாவன இலக்கியத்தில் செய்யுட்கள், அரசியல் விஞ்ஞானத்தில் மேற்கோள்கள், சரித்திரத்தில் வருடங்கள், தாவரவியலில் பெயர்கள்: விலங்கியலில் சொற்பதங்கள், கணிதத்தில் சமன்பாடுகள், இரசாயனவியலில் கோட்பாடுகள், புவியியலில் வரைபடங்கள், பௌதிகவியலில் சுற்றமைப்புக்கள் ஆகும். எல்லாப் பாடங்களிலும் உள்ள வரைவிலக்கணங்கள் பூரணமானமுறையில் மனப்பாடம் செய்தல் வேண்டும். இவ்விடயத்தில் அவற்றினை திரும்பத் திரும்ப ஒப்புவித்தல் மூலம் விருத்தியடையலாம். எமது வாழ்வில் முக்கிய பங்காற்றும் கல்வி தொடர்ச்சியான முறையில் உந்துசக்தியளிப்பதற்கு தொடர்ச்சியான பயிற்சியும் கடின உழைப்புமே கைகொடுக்கும். இது தொடர்பான ஒரு சிறிய கதை. ஒரு நுளம்பானது ஒரு வண்ணத்துப்பூச்சியைச் சந்தித்தது. வண்ணத்துப்பூச்சியின் அழகைக் கண்ட நுளம்பு சிறிது பொறாமைப்பட்டு இவ்வளவு அழகான இறக்கைகளை எவ்வாறு பெற்றுக் கொண்டாய் என வினவியது. வண்ணத்துப்பூச்சியோ அமைதியாக எனது Larva வாழ்க்கையை முடித்துக்கொண்டு தொடர்ந்து உணவோ அல்லது அசைவோ இன்றி பல நாட்கள் இருக்க வேண்டி இருந்தது அதன்பின்பே இவ் அழகான இறக்கைகள் கிடைக்கப் பெற்றன. அதன் அர்த்தம் கடின உழைப்பின்றி எதனையும் பெற்றுக் கொள்ளமுடியாது. இன்னொரு கதை சங்கீத வித்துவான் ஒருவர் நிகழ்ச்சியை முடித்தபின்னர் பார்வையாளர்கள் எழுந்து நின்று கரகோஷம் செய்து பாராட்டினார். பத்திரிகை நிருபர் ஒருவர் அவரை மேன்மையானவர் எனப் பாராட்டினார். அதற்கு சங்கீத வித்துவான் அமைதியான முறையில் 40 வருடகால அனுபவமும் தினமும் எட்டு மணித்தியால பயிற்சியுமே தனக்கு கைகொடுத்ததாகக் கூறினார். எனவே, பயிற்சி ஒரு மனிதனை பூரணப்படுத்துவதுடன், மனப்பூர்வமான முறையில் திரும்பத் திரும்ப கற்றலே மாணவனை வெற்றியாளனாக்குகின்றது. உதாரணமாக செல்வி ஜெலன் கெலர் பற்றி அறிந்திருப்பீர்கள். சிறு வயதில் ஏற்பட்ட நோய் காரணமாக தனது கட்புல, செவிப்புலன்களை இழந்தபோதும் அயரா முயற்சியினால் கல்விகற்று ஐக்கிய இராச்சியத்திலே கட்புலனற்றவர்களுக்காக, எழுத்தாளராக, விரிவுரையாளராக, ஆலோசகராகக் கடமையாற்றி மேலும் ஆக்கங்களை வெளியிட்டு அதன் மூலம் கிடைத்த பணத்தினையும் அங்கவீனர்களுக்காக உதவிய பெருந்தகையாவார். அவர் 1880 ஆம் ஆண்டு இப்பூமியில் பிறந்து 1965 ஆம் ஆண்டில் இவ்வுலகை விட்டு மறைந்தாலும் இன்று மட்டுமல்ல என்றும் மக்களின் மனதில் வாழ்ந்துகொண்டிருப்பார்.

■

# இரைப்பை-கள அமிலப்பின்னோட்ட நோய்க்கான உணவு மற்றும் ஆரோக்கிய வாழ்க்கைமுறைப் பரிந்துரைகள்



டொக்டர் ச.திலக்சி
மருத்துவ போசணைப்பிரிவு

நவீன உலகில் ஏற்பட்டுள்ள உணவு மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்களால் இரைப்பை-கள அமிலப்பின்னோட்ட நோயானது அதிகளவு எம்மைத் தாக்கி வருகிறது. இது ஒரு நீண்டகால நோயாகும். இரைப்பையும் களமும் இணையும் இடத்தில் ஒரு இறுக்கி காணப்படுகிறது. சாதாரண நிலைமைகளில் அது இறுக்கமாகக் காணப்படும். உண்ணும் போது இறுக்கி தளர்ந்து உணவு இரைப்பைக்குள் செல்ல இடமளிக்கும். பின்னர் மீண்டும் மூடிக் கொள்வதால் இரைப்பை அமிலம் மற்றும் உணவு மேலே களத்திற்குச் செல்வது தடுக்கப்படும்.

இந்த நோயின் போது இறுக்கி அடிக்கடி தளர்வதால், மேல் நோக்கி தள்ளப்படும் இரைப்பைச்சாறு மற்றும் அமிலம் என்பன களத்தின் சுவரை சேதப்படுத்தி கள அழற்சியை ஏற்படுத்தி நோயை தீவிரமாக்குகின்றது. இந்த நோயின் பொதுவான குணங்குறிகளாவன நெஞ்செரிச்சல் மற்றும் அமிலப்பின்னோட்டம் (Acid reflux) ஆகும். இந்த நோயானது குணமாக்கப்படாமல் நீண்டகாலம் இருக்கும் போது களச் சுருக்கம், அடைப்பு, காயம், புற்றுநோய் ஏற்பட வழிவகுக்கும்.



அதிக உடற்பருமன், இரைப்பை குடலிறக்கம், அதிக இரைப்பை அமிலச்சுரப்பு, புகைத்தல், பரம்பரை, மன அழுத்தம், முறைகேடான வாழ்க்கை முறை மற்றும் உணவுப்பழக்கம் என்பன நோயை ஏற்படுத்துவதிலும் தீவிரப்படுத்துவதிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்த நோய் ஏற்படாமல் தடுக்க/ தீவிரத்தன்மையைக் குறைக்க பின்வரும் பரிந்துரைகள் விஞ்ஞான ஆய்வுகள் நிரூபனமாகியுள்ளது.

*1)* நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் வழிவகைகளை தேர்ந்தெடுத்து மனதை மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் பேண வேண்டும். மன உளைச்சல் இரைப்பை அமிலச்சுரப்பை அதிகரித்து நோயை அதிகரிக்கும்.

*2)* வயிற்றை இறுக்கும் ஆடைகளை நீண்ட நேரம் அணிவதைத் தவிர்க்கவும்.

*3)* படுக்கைக்கு செல்ல முன் அதிக அளவான உணவுகளை உண்பதைத் தவிர்க்கவும். சிறிய, அளவாக உண்பது சிறந்தது. உணவு அருந்திய பின்னர் குறைந்த பட்சம் *2-3* மணித்தியாலங்களின் பின்னரே படுக்கைக்கு செல்ல வேண்டும்.

*4) 6-8*அங்குலம் / *15-20* வரையில் தலையையும் தோள் மூட்டும் உயர இருக்குமாறு மெத்தையை /கட்டிலின் கால்களை உயர்த்தி படுக்கையைத் தயார் செய்ய வேண்டும். உயர்த்துவதற்கு மரப் பலகையை / செங்கல்லைப் பாவிக்கலாம். எனினும் தலையணைகளை அடுக்கி தலையை மட்டும் உயர்த்தல் பரிந்துரை செய்யப்படவில்லை.

*5)* நித்திரைக் குழப்பம் இரைப்பையின் அமிலச்சுரப்பை அதிகரிக்கும். ஆகையால், அமைதியான தொந்தரவுகளற்ற நித்திரை செய்தல் அவசியமாகும். மின்விளக்குகளை அணைத்து, தொலைபேசிப் பாவனையைத் தவிர்த்து நித்திரை செய்தல் சிறந்தது. அதிலும் இடது பக்கம் உடலைத் திருப்பி சாய்வாக நித்திரை செய்தல் நல்லது.

*6)* இந்த நோயின் அறிகுறிகள் நெஞ்செரிச்சல் மற்றும் அமிலப்பின்னோட்டம் (Acid reflux) ஏற்படுமிடத்து தாங்கள் உண்ணும் உணவுகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும். அதாவது, தத்தமக்கு நோயறிகுறிகளை அதிகரிக்கும் உணவுகளை அடையாளம் கண்டு அவற்றை மட்டும் தவிர்த்தல்/ மட்டுப்படுத்தல் பரிந்துரை செய்யப்படுகிறது. ஆனால், வேறொருவருக்கு நோயை அதிகரிக்கும் உணவுகள் தமக்கும் உகந்தது அல்ல என முற்கூட்டியே முடிவு செய்து அதனைத் தவிர்ப்பது அவசியமற்றது.




பொதுவாக புளிப்புத்தன்மையான பழவகைகள் (எலுமிச்சை, தோடை), சொக்லேட், பொரித்த / கொழுப்பு அதிகமான உணவு, காரஉணவு, கோப்பி, தேநீர், காபனேற்றப்பட்ட சோடா, மதுபானம் என்பன நோயறிகுறிகளை அதிகப்படுத்தலாம்.

*7)* உடற்பருமன் மிக்கவர்கள் உடல் எடையைக் குறைத்து உடற்திணிவுச் சுட்டியை சாதாரண அளவில் பேணிக்கொள்ள வேண்டும்.

(சாதாரண உடற்திணிவுச் சுட்டி = நிறை (Kg)/ உயரம் $(m)^2$= *18.5-23)*

*8)* புகைப்பிடித்தல் மற்றும் புகையிலைப் பாவனையை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

*9)* உணவினை மெதுவாக, நேரம் எடுத்து உண்ணுதல் வேண்டும்.

அவசரமாக மிகக்குறுகிய நேரத்தில் உணவினைச் சாப்பிட்டு முடிப்பது நோயறிகுறிகளை அதிகரிக்கும்

*10)* நார்ச்சத்து அதிகமான உணவுகளை (பழங்கள், மரக்கறிகள்) உண்பது நோயறிகுறிகளை மட்டுப்படுத்தும். ■

# 41 தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி இந்திய சினிமாவின் உச்சத்தைத் தொட்ட நாயகி ஸ்ரீதேவி. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி ஆகிய ஐந்து மொழிப் படங்களிலும் முடிசூடா ராணியாகத் திகழ்ந்தவர் ஸ்ரீதேவி. திரைப் படம் பார்ப்பதை விரும்பாத அரசியல் தலைவரான காமராஜரின் சிபார்சிலேயே ஸ்ரீதேவிக்கு சினிமா வாய்ப்பு தேடிச் சென்றது. கர்மவீரர் காமராஜரின் ஆசிதான் ஸ்ரீதேவிக்கு பக்கபலமாக இருந்தது.

சிவகாசி அருகே மீனம்பட்டியைச் சேர்ந்தவர். ஸ்ரீதேவியின் தந்தை ஐயப்பன். தாய் ராஜேஸ்வரி. காங்கிரஸ் இயக்கத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்ட ஐயப்பன் பெருந் தலைவர் காமராஜரை சந்திக்க அடிக்கடி அவரது இல்லத்துக்குச் செல்வார். ஒருமுறை அவர் காமராஜரைச் சந்திக்கச் சென்றபோது தனது நான்கு வயது மகளான ஸ்ரீதேவியையும் தன்னுடன் அவர் அழைத்துச் சென்றிருந்தார். அப்போது கவிஞர் கண்ணதாசனும் காமராஜர் வீட்டுக்கு வந்திருந்தார். சிறுமி ஸ்ரீதேவியின் சுறுசுறுப்பைப் பார்த்த பெருந்தலைவர் "இந்தச் சிறுமியை நீ சினிமாவில் அறிமுகப்படுத்தலாமே" என்று கண்ணதாசனிடம் கூறினார்.

கண்ணதாசனின் சிபார்சில் சாண்டோ சின்னப்ப தேவர் தயாரித்த 'துணைவன்' படத்தில் பாலமுருகனாக அறிமுகமானார் ஸ்ரீதேவி.

அதற்குப் பிறகு எல்லா தென்னிந்திய மொழிப்படங்களிலும் குழந்தை நட்சத்திரமாக நடித்த ஸ்ரீதேவி 'ராணி மேரா நாம்' என்ற படத்தின் மூலம் ஹிந்திப்படவுலகில் குழந்தை நட்சத்திரமாகக் கால் பதித்தார்.

ஸ்ரீதேவிக்குப் பதின்மூன்று வயதானபோது அவரை தனது 'மூன்று முடிச்சு' படத்தில் கதாநாயகியாக அறிமுகப்படுத்திய இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தர். அந்தப் படத்தில் ரஜினிகாந்துக்கு சிற்றன்னையாக அவரை நடிக்க வைத்தார். அந்த மூன்று முடிச்சு படம் கமல்ஹாசன், ரஜினிகாந்த், ஸ்ரீதேவி ஆகிய மூன்று உச்ச நட்சத்திரங்கள் இணைந்து நடித்த முதல் படமாக அமைந்தது.

இயக்குநர் இமயம் பாரதிராஜாவின் இயக்கத்தில் அவர் நடித்த '16 வயதினிலே', காமிரா கவிஞர் பாலு மகேந்திராவின் 'மூன்றாம் பிறை', இயக்குநர் மகேந்திரனின் 'ஜானி' ஆகியன ஸ்ரீதேவியைத் திரும்பிப் பார்க்க வைத்தன.

'மூன்று முடிச்சு' படத்தில் நடிக்க கமல்ஹாசனுக்கு சம்பளம் முப்பதாயிரம் ரூபாய். ஸ்ரீதேவிக்கு சம்பளம் ஐந்தாயிரம் ரூபாய். ரஜினிகாந்துக்கு மூவாயிரம் ரூபாய். அந்தப் படத்தின் படப்பிடிப்பின்போது ஸ்ரீதேவியின் தாயாரிடம் மிகவும் நெருக்கமாக ரஜினி பழகுவார். என்னுடைய தாயாரும் தன்னுடைய மகன் போல அவர் மீது பாசத்தைப் பொழிவார். அந்தப் படத்தின் படப் பிடிப்பின் போது ரஜினியின் ஒரே லட்சியம் நாம் எப்போது கமல்ஹாசன் போல பெரிய நடிகராக வந்து முப்பதாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குவது என்பதாகத்தான் இருந்தது.

"நீ நிச்சயமாக பெரிய நடிகனாக வருவாய். முப்பதாயிரம் என்ன.. அதற்கும் மேலாக சம்பளம் வாங்குவாய்" என்றுஅவர் ரஜினிக்கு ஆறுதல் கூறுவார். இப்போ ரஜினியின் சம்பளம் கோடிக் கணக்கில் உயர்ந்துள்ளது.

தமிழ் திரையுலகில் குழந்தை நட்சத்திரமாக நடிக்கத் தொடங்கி அதற்குப் பின்னால் முன்னணி நட்சத்திரமாக ஜொலித்தவர்கள் கமல்ஹாசனும் ஸ்ரீதேவியும் மட்டுமே. அது தவிர வேறு சில ஒற்றுமைகளும் அவர்களுக்கு உண்டு. இருவருமே திரையுலகில் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்த சாதனையாளர்கள்.

ஜமுனா, காஞ்சனா, மஞ்சுளா, லதா, சந்திரகலா, ஜெயப்பிரதா, மாதவி, ஜெயசுதா, ஜெயசித்ரா போன்ற நடிகைகளுக்கு மத்தியில் ஸ்ரீதேவி அறிமுகமானார். அடுத்த தலைமுறை நாயகிகளான அம்பிகா, ராதா, சுகாசினி, ராதிகா, ரதி அக்னிஹோத்ரி, விஜயசாந்தி ஆகியோருடனும் ஸ்ரீதேவி போட்டி போட்டு நடித்தார். ஏ.நாகேஸ்வரராவோடு இணைந்து நடித்துவிட்டு அவரது மகன் நாகார்ஜுனாவிற்கும் ஜோடியாக நடித்த பெருமையும் அவருக்கு உண்டு. குழந்தை நட்சத்திரமாக சிவாஜியுடன் பல படங்களில் நடித்த ஸ்ரீதேவி 'கவரிமான்' படத்தில் அவரது மகளாக நடித்தார். பின்னர் 'சந்திப்பு' படத்திலே அவருக்கு ஜோடியானார்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் எல்லா முன்னணி கதாநாயகர்களுடனும் ஜோடியாக நடித்துள்ள ஸ்ரீதேவி மலையாளத்தில் மட்டுமே குறைவான படங்களில் நடித்துள்ளார்.

1960 களில் எம்.ஜி.ஆர், சிவாஜி ஆகிய இருவருக்கும் ஜோடியாக எண்ணற்ற படங்களில் நடித்த சரோஜாதேவியைப் போல ரஜினி, கமல் ஆகிய இருவரின் படங்களிலும் மாறி மாறி நடித்த ஸ்ரீதேவி தமிழ்ப் பட உலகில் மிகப் பெரிய சாதனைகளைப் புரிந்துவிட்டு ஹிந்திப்பட உலகில் அடி எடுத்து வைத்தார்.

தென்னகத்திலிருந்து ஹிந்திக்குச் சென்று சாதனை படைத்த வைஜயந்திமாலா, பத்மினி, ரேகா, ஹேமமாலினி ஆகியோரைத் தொடர்ந்து 1983 ஆம் ஆண்டில் பிரபல தெலுங்கு பட இயக்குநரான ராகவேந்திரராவ் இயக்கிய 'ஹிம்மத்வாலா' என்ற படத்தின் மூலம் ஹிந்தித் திரைப்பட ரசிகர்களின் நெஞ்சங்களில் தனக்கென ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்தவர் ஸ்ரீதேவி.

அவர் ஹிந்தியில் நடித்த முதல் படமான 'சோல்வா சாவன்' மிகப் பெரிய தோல்விப் படமாக அமைந்தது. '16 வயதினிலே' படத்தின் ஹிந்திப் பதிப்பான அந்தப் படம்தான் பாரதிராஜா, ஸ்ரீதேவி இருவருக்குமே முதல் ஹிந்திப் படம்.

1979 இல் ஹிந்தித் திரையுலகில் தோல்வி கண்ட ஸ்ரீதேவி, சரியாக அதற்கடுத்த நான்கே ஆண்டுகளில் 'ஹிம்மத்வாலா' படத்தின் மூலம் ஹிந்திப் பட உலகின் கனவுக் கன்னி ஆனார். ஜிதேந்திராவுடன் 16 திரைப்படங்களில் ஜோடியாக நடித்துள்ள ஸ்ரீதேவி ஹிந்திப் பட உலகின் சூப்பர் ஸ்டாரான அமிதாப்பச்சன் தொடங்கி எல்லா ஹிந்திப் பட கதாநாயகர்களுடனும் ஜோடியாக நடித்தவர். சிறு வயது முதலே சினிமாவில் இருந்தாலும் ஸ்ரீதேவியைப் பற்றி கிசு கிசுக்களே வந்ததில்லை.

ரசிகர்களின் கனவுக் கன்னியான ஸ்ரீதேவியின் வாழ்வில் இருமுறை காதல் மலர்ந்தது. அவரது முதல் காதல் 'ஜானி' படத்தில் அவர் நடிக்கும் போது வந்தது. அவருக்கு யாருடன் காதல் பிறந்தது என்பதைப் பற்றி ஸ்ரீதேவியின் பெயரைச் சொல்லாமல் 'தினத்தந்தி' பத்திரிகையில் வெளிவந்த ஒரு பேட்டியில் இயக்குநர் மகேந்திரன் பகிர்ந்து கொண்டிருக்கிறார்.

"ரஜினி உச்சக்கட்டப் புகழை அடைந்திருந்த போது அவரைத் திருமணம் செய்ய பல நடிகைகள் தயாராக இருந்தார்கள். ரஜினி ஒரு நடிகையை விரும்பினார். அந்த நடிகைக்கும் ரஜினி மேல் விருப்பம். ஒரு நாள் படப்பிடிப்பு நேரத்தில் "அந்த நடிகையைத் திருமணம் செய்து கொள்ள விருப்பப்படுகிறேன். உங்கள் கருத்து என்ன?" என்று என்னிடம் கேட்டார்.

"அந்தப் பொண்ணு உங்க மனைவியாக அமைந்தால் நீங்க ரெண்டு பேருமே நல்லா இருப்பீங்க" என்று சொன்னேன். அன்று அந்த நடிகையின் வீட்டு கிரகப் பிரவேசம். ரஜினியையும் என்னையும் இரவு எட்டு மணிக்கு வரச் சொல்லியிருந்தார் அந்த நடிகை. நாங்கள் இருவரும் போன போது வாசலுக்கு வந்து எங்களை வரவேற்ற அவர் தன்னுடைய அம்மாவை அழைக்க வீட்டுக்கு உள்ளே போனார்.

"நடிகையின் அம்மா வந்தவுடன் கல்யாணப் பேச்சை ஆரம்பிக்கலாமா?" என்று என்னிடம் ரஜினி கேட்டார். அப்போது திடீரென்று மின்சாரம் "கட்" ஆனது. நீண்ட நேரம் மின்சாரம் வரவில்லை.

மீண்டும் வெளிச்சம் வந்த நேரத்தில் ரஜினியின் மனம் மாறி இருந்தது. மின்சாரம் போனதை சகுனத் தடையாக அவர் நினைத்துவிட்டதால் அந்தத் திருமணம் நடைபெறவில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார் மகேந்திரன்.

அந்தக் காதல் தோல்வியைத் தொடர்ந்து நீண்ட இடைவெளிக்குப் பின்னால் ஹிந்தி நடிகர் மிதுன் சக்கரவர்த்தி மீது ஸ்ரீதேவிக்குக் காதல் பிறந்தது. மூன்று ஆண்டுகள் அவரோடு இணைந்து வாழ்ந்த ஸ்ரீதேவி தனது முதல் மனைவியான யோகிதா பாலியை மிதுன் விவாகரத்து செய்யத் தயாராக இல்லை என்பது தெரிந்ததும் மிகுந்த அதிர்ச்சியோடு அவரை விட்டு விலகினார்.

1996 இல் பிரபல பொலிவுட் தயாரிப்பாளரும் நடிகர் அனில் கபூரின் அண்ணனுமான போனி கபூரைத் திருமணம் செய்து கொண்ட ஸ்ரீதேவி, அதன் பிறகு திரையுலகைவிட்டு விலகினார். இவருக்கு ஜான்வி, குஷி என்று இரண்டு மகள்கள் இருக்கிறார்கள்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஸ்ரீதேவி நடித்த தமிழ்ப் படமாக விஜய் கதாநாயகனாக நடித்த 'புலி' படம் அமைந்தது.

ஸ்ரீதேவி நடித்த முதல் திரைப்படமான 'துணைவன்' 1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் வாரத்திலே வெளியானது. அவர் நடித்த கடைசி படமான 'மாம்' திரைப்படமும் அதே ஜூலை மாதம் முதல் வாரத்தில் வெளியானதை ஒரு விசேஷ ஒற்றுமை என்றுதான் சொல்ல வேண்டும்.

இயற்கையை வெல்ல முடியாது என்ற நியதி காரணமாக அவர் இறந்துவிட்டார் என்றாலும் திரைப்பட ரசிகர்கள் மனதில் அவர் என்றும் வாழ்வார் என்பதில் சந்தேகமில்லை. ■



ரமணி

ஆதவன்

சிறுகதை

# பகைவர்கள்



அவன் தனியாக அந்த வீட்டில் இருந்தான். ஒரு செக்கல் பொழுது இரணியன் இரத்தம் சிதறிக் கிடந்த செந்நிற வானம். கல கலவென்று குருவிகள், தாழப்பறக்கும் வெளவால்கள் உந்தும் காற்றின் ஒலியுடன் அந்த ஓலமும் கலந்தது. அவன் கண்கள் திறக்க முடியாமல் கிடந்தான். வாடை குமட்டும் அளவுக்கு பரவியதால் அக்கம் பக்கத்தினர் அங்குலம் அங்குலமாக அலசியும் காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை. தினமும் ஆகக்குறைந்தது காலை உணவுக்கும் தேநீருக்குமாவது வருபவனை சில நாளா கடைப்பக்கம் காணவில்லை என்று சந்திரன் தேடி வந்திருக்கிறார்.

சந்திரன் யாழின் புறநகரான மானிப்பாயில் 15 வருடமாக கடை நடத்துகிறார். அவருக்கு 55 வயதிருக்கும். பாதி நரைத்த கேசம். திருநீறு பட்டையுடன் எப்போதும் செந்தழிப்பான சிரிச்ச முகம். அவனுடன் அதிகம் பேசக்கூடிய ஒரு ஆள் என்றால் அது இந்த சாப்பாட்டுக் கடை சந்திரன் அண்ணாதான். காலை உணவுக்கு இடியப்பம், சம்பல் இல்லையென்றால் பாண் பருப்பு அவைதான் என்றும் மாறாத தெரிவு. ஆனாலும் அவனுக்கு அந்தக் கடை மட்டுமே பிடித்திருந்தது. சந்திரன் அண்ணையும் அளவுடன் அவனுக்கு ஏற்ற மாதிரிக் கதைப்பார். அதிகம் அலட்டல் பிடிக்காது. எப்போதும் முகத்தை இறுக்கமாக வைத்திருக்கும் அவனுக்கு இடைக்கிடையே சிரிப்பை வரவழைக்கும் ஓரிரு நெருங்கிய நண்பர்களைத் தவிர இந்தச் சந்திரன் அண்ணாவின் சம்பாஷணைகள் மட்டுமே. அது கவலைக்கும் கோபத்துக்கும் இடைப்பட்ட ஊடாட்ட முகம் அவனது. சின்ன வயசில் இருந்து குடும்பத்துடன் சேர்ந்து வாழப் பிடிக்காது சண்டை பிடித்தான். பிடிக்கவில்லை என்பதைவிட தனியாக இருக்க விரும்பினான்.

அடிப்பக்கம் அகன்ற வெல் வட்டம் நீளக் கால்சட்டை 80 களில் பிரபல்யம். அதை 90 நடுப்பகுதியில் இளைஞர்கள் அதிகம் அணிவதில்லை. அதை அவன் மட்டும் அணிந்து திரிந்தான். பார்ப்பவர்களுக்கு வித்தியாசமாகவே தெரிந்தவன். எப்போதும் வித்தியாசங்கள் கவரும் அல்லது அருவருப்பாக இருக்கும். இரண்டும் பார்ப்பவர்களின் சார்பு நிலையின் வெளிப்பாடுதான். எந்த வெளிப்பாட்டையும் மண்டைக்குள் ஏற்காமல் திரிந்தவன்.

அவனுக்கும் வித்தியாசம்தான் பிடிக்கும். அவளையும் அதனாலே விரும்பியிருப்பான் போலும். வழமையாக இளவட்டங்கள் சொல்லித் திரியும் நல்ல ஃபிகர் என்று சொல்ல பயப்படும் அழகு. சாதாரண பொலிஸ் அதிகாரி. அழகான அதிகாரி என்றுதான் சொல்லவேண்டும். அந்தக் காக்கி சட்டையில் எடுப்பாகவே தெரிவாள். நாளாந்தம் வேலைக்குப் போகும் போது அந்தச் சந்தியைத் தாண்டி போகவேண்டும். இராணுவத் தடுப்பு அங்கே சில இராணுவத்தினர். அவர்களுடன் அவளும் இன்னும் ஒரு பெண் பொலிஸ் என்று சோதனை செய்ய இருப்பார்கள். அவன் வித்தியாசமாக இருந்தது அவளை ஈர்த்திருக்கலாம். அவன் சைக்கிளை விட்டு இறங்கி தலை குனிந்து நடந்தான். சோதனை சாவடிக்குள் அப்படித்தான் நடந்து செல்லவேண்டும். முதல் தரம் அவளைக் கண்ட போது முகத்தில் சலனத்தைக் காட்டாமல் விறைத்த பார்வையை வீசிவிட்டு கடந்தான். பார்வையை அதிகம் அவள் மேல் வீசும் எண்ணம் சற்றும் இல்லை. அவள் தன்னைச் சுற்றி வலம் வரும் இராணுவ நண்பர்களைக் காட்டிலும் அவனையே அதிகம் அவதானிக்கிறாள்.

காலையிலும் மாலையிலும் வெக்கை அதிகம் இல்லாத சந்தி வாகனங்களின் புழுதியில் தோய்ந்து கிடக்கும். மேலதிகமாக இடையிடையே இராணுவ கனரக வாகனங்கள் கடக்கும் சந்தி. அவளின் பார்வையை சில மாதங்களிலேயே அந்தப் புழுதியூடாக கண்டுவிட்டான். தனியே இருக்கும் போது அவளின் நினைவுகள் வரத் தொடங்கிவிட்டது. இதுவரை காலமும் இப்படியொரு தொந்தரவு வந்ததில்லை. மெதுவாக நினைவுகள் பிரவாகம் எடுப்பதை அதிசயமாக ரசிக்கிறான். இரவுகளில் தூக்கம் தூரமாகப் போகிறது. தனிமையின் அமைதி அதிகம் வைராக்கியம் மட்டும் இல்லை துணிவையும் தந்திருக்கும் போல. திடமான முடிவு எடுத்து விட்டான். அடுத்த நாள் அதே சலசலப்புகளில் சந்தி. மூன்றுக்கு மூன்று அடி சதுர கூடாரம். பெண்களைப் பரிசோதிக்க அமைக்கப்பட்டது. பச்சை நிற தரப்பாள் சுற்றி கட்டப்பட்ட கூடாரம் இரண்டு பக்கமும் வாயில்கள். காற்றுக்கு வாயில் மறைப்பு பட படவென்று அடித்தது. அதன் அருகில் அடுத்த பெண் பயணிக்க காத்திருந்தாள். அப்போதுதான் ஒரு பெண் ஆசிரியரை சோதித்துவிட்டு கூடாரத்துக்கு வெளியே வந்தாள். நேரே அவளை நோக்கிச் சென்றான். வலது கையை நீட்டி கைலாகு கொடுக்க அவளும் புன்சிரிப்புடன் அவன் கையைப் பற்றினான். அவளுக்குத் தெரிந்திருக்கும் போல. எதிர்பார்த்திருக்க வேண்டும். ஆனால் பயம் சிறிய நடுக்கத்துடனே கையைப் பற்றினாள். இரண்டு இராணுவ அதிகாரிகள் சற்றுத் தொலைவில் நின்றதால் தெளிவாகப் பார்த்திருப்பார்களா? என்பது அவளுக்கு சந்தேகமாகவே இருந்தது.

சந்திரன் அண்ணாவின் கடையிலும் சோதனைச் சாவடிக்கு அந்தப்பக்கம் உள்ள கடையிலும் இருவரும் சந்திக்கும் கணங்கள் அதிகரித்தது. உள்ளூர்வாசிகளுக்கு இது நம்பமுடியாத அதிசயமும் அதே வேளை பயத்தையும் கொடுத்தது. சிங்கள பொலிஸ் பெண்ணை காதலிப்பது அதிசயம். 1995 இடம்பெயர்வுக்கு பிறகு முதல் முறையாக இராணுவ கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்த பகுதி. இயக்கம் மறைந்திருந்து தாக்குதல் நடத்துவதால் இதுமாதிரி சோதனைச் சாவடிகள் மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் சந்திகளில் இருந்தது. இராணுவத்துடன் கதைத்து பழக்கம் ஏற்படுத்தும் பலர் இயக்கத்தால் சுடப்பட்டது பயத்துக்கு முக்கிய காரணம்.

“அவனுக்கு என்ன துணிவு போயும் போயும் ஒரு சிங்கள பொலிஸ்காரிய லவ் பண்ணுறான். எப்ப போட்டுத்தள்ளப் போறாங்கள் எண்டு தெரியல” என்று சனம் கதைக்க தொடங்கிவிட்டது. ஜாடை மாடையா சந்திரனும் அவனுக்கு சொல்லிப் பார்த்தவர். அவனுக்கு அதன் பின்விளைவுகள் தெரிந்தாலும் இயல்பாகவே இருந்த விறுக்குத்தனம் உதாசீனம் செய்தது. அவன் கடையில் சாப்பிடும் போது சந்திரனுக்கு பதட்டமாக இருக்கும். யாராவது வேகமாக சைக்கிளில் வந்தால் மேலதிகமாக நடுக்கம் வந்துவிடும். அவரால் எதும் செய்ய முடியாது அவன் மேல் பரிதாபப்படுவதைத்தவிர. அவளும் சிலநேரம் சந்திரன் அண்ணையின் கடையில் அவனுடன் சேர்ந்திருந்து சாப்பிடுவாள். கடைவாசலையும் பின் சமையல் கட்டு கதவையும் நோட்டமிடுவது அவளின் எச்சரிக்கை உணர்வைக் காட்டும். அன்றைக்கு இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது ஒரு பொலிஸ் ஜீப் வந்தது. சந்திரனுக்கு சற்று ஆறுதலாக இருந்தது. நாலைந்து பொலிஸ்காரர் இருந்தால் இயக்கம் உள்ளே வராது. அவள் காதலிப்பது மற்ற பொலிஸ்காரருக்கு தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் அதைப்பற்றி பெரிது படுத்தாமல் இருந்திருக்கலாம். கல்யாணம் கட்டி தெற்குப் பக்கம் போய் வாழ்ந்தால் பாதுகாப்பாக இருக்கும் இப்படி அதுவரை சந்திரன் அண்ணாவும் நினைத்ததை அன்றுதான் தவறு என்று கண்டுகொண்டார். திடுதிடுப்பென்று உள்ளே வந்த நான்கு பொலிஸ்காரர்களில் ஒருவன் அவளை தரதரவென்று இழுத்துச்சென்றான். மற்ற மூவரும் அவனை எச்சரித்தனர். கை வைக்காத குறைதான். அவளின் காதல் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை சந்திரன் அண்ணா அன்றுதான் உணர்ந்தார். அவளை இழுத்துச் சென்றவன் பலதடவை இவனை அச்சுறுத்தியுள்ளான் என்ற விபரம் கொஞ்சம் கொஞ்சமாக அவருக்குத் தெரியவந்தது. அந்த பொலிஸ்காரன் அவளை ஒருதலையாக விரும்பியிருக்கலாம் அல்லது இனவாதியாக இருந்திருக்கலாம். இவ்வாறு சந்திரன் அண்ணாவுக்கு பலவாறு சிந்திக்கத் தூண்டியது.

ஒரு மாதத்துக்கு முதலும் முகத்தில் காயங்களுடன் வந்தவன் புதிதாக இன்னொரு புதிய வில்லங்கத்தையும் இழுத்து வந்திருந்தான். சந்திரன் அண்ணாவுக்கு தப்பாக ஏதோ நடந்திருக்கலாம் என்ற சந்தேகம் வலுத்தது. “என்னதான் நடந்தது” நாலு தடவைக்கு மேல் கேட்டிருப்பார். அவன் தலையைக் குனிந்தபடி தேநீரை மெதுவாக உறிஞ்சிக் கொண்டிருந்தான். நீண்ட மௌனம் இருவருக்கும் இடையில். அவனாகவே சொன்னால் சொல்லட்டும் என்று தன்பாட்டில் எச்சில் கிளாஸை கழுவி அடுக்கினார். யாரும் இல்லாத கடையை தலைநிமிர்த்தி சுற்றி பார்த்தவன், “அண்ண, இண்டைக்கு வசமா ஒருத்தன் வேண்டிக்கட்டினான். முகத்த பெயர்த்துட்டன்.” நமட்டு சிரிப்பை உதிர்த்தவன் மீண்டும் குனிந்து தேநீரை உறிஞ்சினான். இராணுவத்துடன் சேர்ந்தியங்கிய தமிழ் குழு ஒன்றின் உறுப்பினருடன்தான் வாய் தகராறு கைகலப்பில் முடிந்திருந்தது. இப்படிப் பல முனைகளில் எதிரிகளைச் சம்பாதித்திருந்தான்.

திடமாக ஒருமுடிவுக்கு வரமுடியாமல் குழம்பினார் சந்திரன் அண்ணா. அவனைக் காணவில்லை என்பதால் சந்தேகம் இன்னும் வலுத்தது.

“நாலு நாளா ஆளைக் காணவில்லை. போய் பார்த்திட்டு வாறன். கொஞ்சம் கடையை பாத்துக் கொள்” கடையில் நின்ற வயசான கிழவர் கதிர்வேலருக்கு சொல்லியவாறு தனது பழைய சைக்கிளை எடுத்தார் சந்திரன்.

“எனக்கு வேற என்ன வேலை.” என்று நமட்டு சிரிப்புடன் கிழவரும் வாயில் பக்கம் கிடந்த வாங்கில் அமர்ந்தார். வாயில் ஒரு சுருட்டு முழு நீளத்தில் இருந்தது. அப்பதான் பற்ற வைத்திருக்க வேண்டும். அவருக்கு 75 வயதிருக்கும் கையில் சற்று நடுக்கம் வேறு வந்துவிட்டது. அவரின் வீடு கடைக்கு கொஞ்சம் தள்ளித்தான் இருந்தது. காலையிலும் மாலையிலும் இந்தக் கடையின் முன்தாவாரத்து வாங்கிலில்தான் இருந்து உறண்டை இழுப்பார். அதுதான் வாற போற ஆட்களுடன் வெட்டிக்கதை பேசுவது. அவன் ஆர ஏமாத்தி காச ஆட்டைய போட்டான், அவன்ர பெட்டை எவனோட ஓடியது, தமிழ்க் கட்சிகளை வசை பாடுவது, அங்க இயக்கம் அடிச்சது அதில இத்தனை ஆமி செத்தது இப்படியே வரிசைக்கு சளைக்காமல் அடித்துக் கொண்டே இருக்கும் மனுசன். சந்திரன் போவதைப் பார்த்தவர் “உவனுக்கு விசர். அவன தேடி போறதுக்கு உதில பொலிஸ் சென்றில நிக்கிற ராகிணிட்ட கேக்க வேண்டியதுதானே. அடுகொடையா அங்கதான் சுத்திக் கொண்டு திரிந்தவன்.” தனக்குள்ளே சொல்லிக்கொண்டார்.

இரவுக்கும் பகலுக்குமான இடைவெளியை நிரப்பும் மாலை செக்கல் நேரம்.

முன்கதவு திறந்தே இருந்தது. வீட்டு முற்றத்தில் நின்று கூப்பிட்டுப் பார்த்தார். ஹோலும் அறைகளிலும் எவரும் இல்லை. பின்பக்க கோடியில் இருந்து குமட்டல் மனம் மூக்கை துளைத்தது. அங்கே கறுப்பேறிய உடல் மேல்ச்சட்டை இல்லாமல் குப்பிற கிடந்தது. பச்சைக் கட்டம் போட்ட சாரம் அரையில் இழகாமல் இருக்க தலையில் பெரிய வெடிப்பு. இரத்தம் வழிந்து வட்டமாக புற்தரையில் காய்ந்து கிடந்தது. இலையான்கள் மொய்த்து களைத்து விட்டன போலும் மெதுவாகவே சுற்றிவந்தன. சந்திரன் அண்ணாவின் உடல் நடுங்க அலறிக் கத்தினார். அயலட்டையில் இருந்தவர்கள் அடித்து விழுந்து ஓடி வந்தனர். சிலர் பொலிஸை கூப்பிட விரைந்தனர். சந்திரன் அண்ணா தனது சைக்கிளை எடுத்து மிதிக்கத் தொடங்கினார். செயலின் விளைவு தெரியும் இருந்தும் அவனைத் தடுக்க தன்னால் ஆனமட்டும் சொல்லிப்பார்த்தவர். எதுவும் எடுபடவில்லை என்ற துக்கம் மட்டும் இருந்தது. எவன் செய்தான் என்று சிந்திப்பதைத் தவிர்த்தார். விடைதெரியாத பல கேள்விகளில் இதுவும் ஒன்றானது. சில உண்மைகள் தெரியாமல் இருப்பதையே அவரும் விரும்புகிறார்.

■

செந்தமிழ்ச்செல்வர் பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா



# 12 குறள் இன்பம்

திருக்குறளின் காமத்துப்பால் இலக்கணம் வகுத்துள்ள காதல் இலக்கியத்தின் இனிமையைப் பகிர்ந்துகொள்ளும் கட்டுரைத்தொடர்.

திருக்குறளின் காமத்துப்பாலில், களவியலில் ஐந்தாவதாக இடம் பெறுகின்ற, காதல் சிறப்பு உரைத்தல் என்னும் அதிகாரத்தில் பிரிந்திருக்கும் காதலர்கள் தாம் ஒன்றாகச் சேர்ந்திருந்த காலத்தில் இருவரும் சேர்ந்து அனுபவித்த இன்பத்தையும் மகிழ்ச்சியையும் எண்ணிப் பார்த்து, அந்த நினைவுகளைப்பற்றி வெளிப்படுத்தும் காட்சிகளை நாம் காணலாம். முதல் ஐந்து குறள்கள் காதலன் கூறுவதாகவும் மற்றைய ஐந்து குறள்களும் காதலி சொல்வதாகவும் உள்ளன. இந்த அமைப்பு காதலில் ஆணும் பெண்ணும் சமமான உணர்வும் உரிமையும் உள்ளவர்கள் என்பதை வெளிப்படுத்துவதாக உள்ளது.

**பாலுடன் தேன்கலந்த சுவையினைச் சொல்லவா?**

முத்தம் என்பது அன்பை வெளிப்படுத்தும் அற்புதமான செயல். மனிதர்கள் மட்டுமன்றி விலங்குகளும் தங்கள், அன்பை வெளிப்படுத்தவும் இசைவைத் தெரிவிக்கவும் ஒன்றையொன்று முத்தமிடுவது இயல்பானது. பெற்றோர் தம் குழந்தைகளின் கன்னத்தில் முத்தமிட்டுக் களிப்படைவதும் குழந்தைகள் பெரியவர்களானதும் உச்சி முகர்ந்து, நெற்றியில் முத்தமிட்டுத் தமது அன்பை வெளிப்படுத்துவதும் இன, மத வேறுபாடின்றி உலக மக்கள் எல்லோரிடமும் உள்ள பொதுவான பழக்கமுறையாகும். பெற்றோர்கள் மட்டுமன்றி சகோதரர்கள், நண்பர்கள் கூடக் கன்னத்தில் முத்தமிட்டுத் தமது அன்பைத் தெரிவிக்கும் வழக்கம் மேலைநாடுகளில் சாதாரணமானதே. ஆனால், காதல் வயப்பட்டோர் மட்டுமே பரிமாறிக்கொள்வது இதழ்களும் இதழ்களும் இணையும்



முத்தம். அதனை வேறுயாரும் பரிமாறிக்கொள்வதில்லை. அவ்வாறு பரிமாறிக்கொள்பவர்கள் காதலர்களாகவோ, தம்பதிகளாகவோ அல்லது அதுபோன்ற உறவுள்ளவர்களாகவோ மட்டுமே இருக்க முடியும். முத்தம் என்பது வெள்ளைக்காரன் கண்டுபிடித்த விடயம் என்பது போல நம்மில் சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இற்றைக்கு ஐந்தாயிரம் வருடங்களுக்கு முன்னரே முத்தத்திற்கு இலக்கணம் வகுத்த நூல்கள் தமிழ் மொழியில் ஆக்கப்பட்டுள்ளன. மனிதகுலம் தோன்றுமுன்னரே தோன்றிவிட்ட அந்த உன்னதமான உணர்வு வெளிப்பாட்டின் உடல் செயற்பாடுபற்றி எண்ணற்ற இலக்கியங்களில் எடுத்துரைக்கப் பட்டுள்ளன. திருக்குறளிலும் மிகவும் நளினமாகச் சொல்லப்பட்டுள்ளது.

**"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி**
**வாலெயிறு ஊறிய நீர்" (1121)**

மிகவும் இதமாகப் பேசும் அவளின் (எனது காதலியின்) வெண்மையான பற்களில் ஊற்றெடுக்கும் நீர், பாலுடன் தேனைக்கலந்து பருகுவது போல இனிமையானது என்பது நேரடிக்கருத்து.

**அவளும் நானும் உடலும், உயிரும் போல் அல்லவா?**

உயிர் அழிவதில்லை என்றும் உயிருக்கு மரணமில்லை என்றும் சொல்லப்படுகின்றது. உயிர் உடலை விட்டுவிட்டால் பரமாத்மாவுடன் சேர்ந்துவிடும் என்று சைவசித்தாந்தமும் உயிரே பரமாத்மாவாகிவிடும் என்று வேதாந்தமும் சொல்கின்ற கோட்பாடுகள் மட்டுமன்றி, ஏனைய மதங்களும் உயிர் பற்றியும் உடல் பற்றியும் தனித்தனியான நெறிகளைக் கொண்டுள்ளன. ஆனால், இவ்வுலக வாழ்க்கையில் உயிரும் உடலும் சேர்ந்தால்த்தான் வாழமுடியும் என்பதே இயற்கையின் ஏற்பாடு. ஒன்றும் ஒன்றும் சேர்ந்து ஒன்றாவதே அந்தக் கோட்பாடு. இதில் உயிர் பெரியதா, உடல் பெரியதா என்ற கருத்திற்கு இடமில்லை. அதனைப்போன்றதே எனக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பாகும். நான் உயிர் என்றால் அவள் உடல். நான் உடல் என்றால் அவள் உயிர். உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பினைப் போன்றதே எனக்கும் அவளுக்கும் உள்ள நட்பாகும்.

இவ்வாறு, காதலன் ஒருவன் தனக்கும் தன் காதலிக்கும் இடையிலுள்ள காதலின் சிறப்பினை உணர்த்துவதாக இந்தக் குறள் அமைந்துள்ளது.

**"உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன**
**மடந்தயொடு எம்மிடை நட்பு" (1122)**

உடலுக்கும் உயிருக்கும் இடையில் உள்ள தொடர்பினைப் போன்றதே, எனது காதலிக்கும் எனக்கும் இடையில் உள்ள (நட்பு) உறவு என்பது இந்தக்குறளின் நேரடியான பொருளாகும்.

**அவளுக்கு இடம்வேண்டும், நீ இருப்பது நல்லதா?**

ஒரு காதலன் தனது காதலியை என் கண்ணே, என் கண்மணியே என்றெல்லாம் நெஞ்சிலே நினைப்பதும் நேரடியாக அழைப்பதும் கடிதத்தில் எழுதுவதும் காலங்காலமாக இருந்து வரும் வழக்கம். கண்ணை இழந்தாலும் காதலை இழக்காத காதலர்களின் கதைகள் நம்மிடையே நிலவுகின்றன. இங்கே ஒருவன் தனது கண்ணின் கருமணியில் உள்ள இடம் முழுவதிலும் தனது காதலிமட்டுமே நிறைந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறான். கருமணியில் நடுவிலே வட்டமாக அமைந்திருக்கும் பகுதி கண்பாவை என்று குறிப்பிடப்படுகிறது. அதுதான் கண்ணுக்குள் வருகின்ற ஒளியைச் சீர்படுத்திப் பார்வையை உண்டாக்குகின்றது. அத்தகைய முக்கியமான பாவை அங்கே இருப்பதைவிடத் தனது காதலி இருப்பதுதான் அவனுக்கு இன்றியமையாத தேவையாகப்படுகிறது. தனது காதலியைவிட வேறு யாராவது அல்லது ஏதாவது அந்தக் கருமணியில் இருந்தால், தனது காதலி வசதியாக அமர்ந்திருக்க இடம் போதாமல் போய்விடுமே என்று வருந்துகிறான்.



அதனால், கருமணியில் இருப்பதாக அவன் நினைக்கும் பாவையை அங்கிருந்து அகன்றுவிடு என்கிறான். தனது கண்கள் விழித்திருந்தாலும் மூடியிருந்தாலும் எந்நேரமும் தன்காதலியை வசதியாகத் தன் கண்களுக்குள்ளேயே, வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறான். அதனால் அவளுக்கு இருப்பதற்கு இடத்தைக்கொடுத்து விட்டு, நீ போய்விடு என்று தனது கருமணியின் பாவையிடம் வேண்டுகோள் விடுக்கிறான்.

**"கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்**
**திருநுதற் கில்லை யிடம்" ( 1123 )**

"என் கண்ணின் கருமணியில் உள்ள பாவையே, நான் விரும்பும் எனது அழகிய காதலிக்கு இருப்பதற்குப் போதிய இடமில்லாமல் உள்ளது, அதனால் நீ அந்த இடத்தை அவளுக்குக் கொடுத்து விட்டு அகன்றுவிடு" என்பது இந்தக் குறளின் நேரடிக் கருத்தாகும்.

**என்னவள் பிரிய என்னுயிர் பிரியுதே, இல்லையா?**

இந்த உலகில் உடல் இல்லாமல் உயிரினால் தனித்து வாழ முடியாது. உயிர் இன்றி உடம்பிற்கும் வாழ்வில்லை. அதேபோலவே, நான் வாழும் உடலாக இருக்கும் போது எனது காதலி உயிராக இருக்கிறாள். அதனால் நான் வாழ்கிறேன். ஆனால் அவள் பிரிந்து செல்லும் போது, என் உடலை விட்டு உயிர் பிரிவது போல இருக்கிறது. அவளின் பிரிவு எனக்கு மரணத்தைத் தருவதுபோல இருக்கிறது. உயிரும் உடலும் ஒன்றையொன்று பிரியும்போது, மரணம் உண்டாவதைப்போல, என்னைவிட்டு அவள் நீங்கும்போது எனக்கு இறப்பது போல இருக்கிறதே என்று காதலன் சொல்கிறான்.

பண்டைக்காலத்தில் மட்டுமன்றி, இந்தக்காலத்திலும் எந்தக் காலத்திலும் கூடிக்களித்திருக்கும் காதலர்கள், பிரியும் நேரம் வரும் போது கண்கள் கலங்குவதும் மீண்டும் சந்திக்கலாம் என்ற நிலை இருந்தும் அந்தத் தற்காலிகப் பிரிவுக்கே உயிரே போவதுபோன்ற உணர்வினால் தவிப்பதும் காதலுக்கு மட்டுமே உள்ள தனித்துவமாகும். காதலித்தவர்களுக்கு அது தெரியும். காதலித்துப் பாருங்கள் அப்போது புரியும்.

**"வாழ்தல் உயிர்க்குஅன்னள் ஆயிழை சாதல்**
**அதற்கன்னள் நீங்கும் இடத்து" (1124)**

அவள் என்னுடன் கூடியிருக்கும் போது, எனக்கு உயிராக இருக்கிறாள். என்னைவிட்டு அகலும்போது, எனது உயிர் பிரிவதைப்போன்ற நிலையே எனக்கு உண்டாகின்றது. என்பது இந்தக் குறளின் கருத்து.

**(தொடரும்...)**

# கல்யாணக் கனவு

யாழ் சத்யா

கனவு 47

தொடர்கதை

ஒரு சுபயோக சுப தினத்தில், தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நெருங்கிய பந்துக்கள் சூழ, வைஷாலியின் கழுத்தில் திருமாங்கல்யத்தைப் பூட்டினான் கடம்பன்.

சஞ்சயன் தோளில் அமர்ந்திருந்த ஆயுஷ் அட்சதை தூவி வாழ்த்த அனைவர் மனமும் ஆனந்தத்தில் திளைத்திருந்தது.

கல்யாணத்தைப் பற்றி வைஷாலி கனவு காணும்போது அவள் கற்பனை செய்திருந்த எந்தவிதமான கல் வேலைப்பாடுமற்ற சிவப்பும் தங்க நிறமும் கலந்த தூய பட்டுப் புடவையில் தங்கச் சிலையாகப் புதுப்பெண்ணாய் மின்னிக் கொண்டிருந்தவளின் காதுக்குள் அவள் ஆருயிர்த் தோழன்,

“அப்பிடியே அம்மனாட்டம் சூப்பரா இருக்கிறாய் முயல்குட்டி... நானே நாவுறு பார்த்திடுவன் போல இருக்குடி...”

என்றான். தோழனின் இனிமையான பாராட்டில் முகம் குப்பெனச் சிவக்க அழகாக வெட்கப்பட்டாள் வைஷாலி.

இரண்டாம் திருமணம் என்பது அவளால் அவ்வளவு இலகுவாக ஏற்கக் கூடிய விடயமில்லைத்தான். பழைய நினைவுகள் ஒரு நொடி வந்து செல்ல கலங்க முற்பட்ட கண்களைப் பிடிவாதமாகத் தடுத்து நிறுத்தினாள். குடும்பத்தினர் முகங்களில் தெரிந்த மலர்ந்த புன்னகை தான் எடுத்த முடிவு எவ்வளவு சரியானதென்பதை அவளுக்குத் தெளிவாகவே அறிவுறுத்தியது.

ஆயுஷூக்கு அம்மாவாக இலகுவில் ஏற்றுக் கொண்ட மனது கடம்பனுக்கு மனைவியாகக் கொஞ்சம் முரண்டு பிடித்ததுதான். இருந்தாலும் வாயெல்லாம் பல்லாகத் தெரியும் சஞ்சயனும் ‘அம்மா அம்மா’ என்று பூனைக் குட்டி போல அவள் காலைச் சுற்றி வரும் ஆயுஷூம் அவள் மனக்குழப்பங்களைப் பின்தள்ளி அவளுக்கே ஒரு சந்தோசத்தைத் தந்தன எனலாம். எல்லாவற்றையும்விட அமைதியாய் அவள் உணர்வுகளைப் புரிந்து நடந்து கொள்ளும் கடம்பன் அவளுக்குப் பெரும்நிம்மதியை அளித்தான். சடங்குகள் முறைப்படி நடந்தேற ஆரம்பத்தில் கொஞ்சம் இறுக்கமாகவே இருந்தாலும் நேரம் செல்லச் செல்ல தளர்ந்தாள் வைஷாலி.

மாலையில் கடம்பன் தாய், தங்கை குடும்பத்தினரும் வைஷாலி குடும்பத்தினரும் சஞ்சயனும் மட்டுமே வைஷாலி வீட்டில் கூடியிருக்க பதிவுத் திருமணம் நடைபெற்றது. கண்ணுக்குக் குளிர்ச்சியான மெல்லிய செவ்விளநீர் நிறத்தில் மேலைத்தேய பாணியில் குதிக்கால் வரை நீண்ட சட்டையை அணிந்திருந்தாள் வைஷாலி. கருநீல நிற கோட்சூட்டில் கம்பீரமாய் நின்றிருந்தான் கடம்பன். வைஷாலி அருகில் ஆயுஷைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்த சஞ்சயன் காதைக் கடித்தவள்,

“எனக்கு இந்தச் சட்டையைப் போட்டிருக்க வெட்கமாக இருக்குடா சஞ்சு...”

“நீதானே ரிசப்சனுக்கு இப்பிடி வெஸ்டேர்ன் ஸ்டைல்ல ப்ரொக் போட வேணும் என்று ஆசைப் பட்டாய்...”

“அடேய்...! அது சின்ன வயசில ஒரு ஆர்வக் கோளாறில ஆசைப்பட்டதுடா... இப்ப இந்த வயசில இது தேவையா...? சத்தியமா நீயும் உன்ர ப்ரெண்டும் சேர்ந்து பண்ணுற அளப்பறை தாங்க முடியலடா. சின்ன வயசில எல்லாப் பொண்ணுங்களுக்கும் தங்கட கல்யாணவீடு அப்பிடி நடக்க வேணும் இப்பிடி நடக்க வேணும் என்று ஆயிரம் ஆசைகள் இருக்கத்தான் செய்யும். நான்தான் அதை லூசு மாதிரி டயரில எழுதி வைச்சன் என்றால்... அதை வாசிச்சிட்டு இந்த வயசில நீங்கள் என்னைப் போட்டுப் படுத்துற பாடிருக்கே... அடங்குங்கடா... ப்ளீஸ்...”

கடம்பனும் சஞ்சயனும் கல்யாணம் பற்றி அவள் கண்டிருந்த கனவுகளை ஒன்று விடாமல் நிறைவேற்றுவதாக கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். பாவம் அந்த நண்பர்கள்! கல்யாண நிகழ்வுகளைவிட ஒரு பெண் கல்யாணம் செய்து வாழப் போகும் வாழ்க்கையைப் பற்றித்தான் ஆயிரம் கனவுகள் கண்டிருப்பாள் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்குமோ என்னவோ? அதையும் நிறைவேற்றி வைப்பார்களா இவர்கள்?

சஞ்சயனோ அவள் கோபத்தையும் வெட்கத்தையும் பொருட்படுத்தாது,

“அப்பிடி உனக்கு என்ன வயசாகிட்டு வைஷூ...? எங்கட வயசில எல்லாரும் இப்பதானே கல்யாணம் கட்டுறாங்கள்...உன்னை இந்த உடுப்பில பாக்க உண்மையாவே பத்து வயசு குறைஞ்சு சின்னப்பிள்ளையாட்டம் நல்ல வடிவா இருக்குடி...”

என்று சஞ்சயன் கூறவும், “உனக்கென்ன நீ சொல்லுவாய்” என்று நொடித்தாள் வைஷாலி. என்னதான் சிறு கோபம் காட்டினாலும் நண்பன் தன்மீது வைத்திருக்கும் அன்பை எண்ணி மனம் நெகிழ்ந்து நின்றாள்.

“இனிமேல் நீ என்ன ஆசைப்பட்டாலும் உனக்கு என்ன கனவிருந்தாலும் அதை நிறைவேற்றுறதுதான்டி என்ர வேலை...”

காதுக்குள் கிசுகிசுத்துக் கொண்டிருந்தவனை வாஞ்சையுடன் நிமிர்ந்து பார்த்தாள்.

“என்ர கடவுளே! என்னதான் கதைப்பினமோ தெரியாது... எப்ப பார்த்தாலும் ஏதாவது கதைச்சுக் கொண்டே இருக்கிறது. அத்தான! நீங்களாவது இவை ரெண்டு பேரையும் இனி அடக்கி வைக்க வேணும் சரியோ? சரி... சரி... எல்லாரும் கொஞ்சம் போட்டோஸ்க்கு போஸ் குடுக்கிறியளா...?”

விசாலி மேடிட்ட வயிற்றைப் பிடித்தபடி கடுப்பாகிக் கத்தவும் சஞ்சயனும் வைஷாலியும் அவர்கள் பேசுவதையெல்லாம் ஒரு புன்முறுவலோடு கேட்டுக் கொண்டிருந்த கடம்பனும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

இனிதாய் திருமண நிகழ்வுகள் முடிவுற பேச்சும் சிரிப்புமாய் மகிழ்ச்சியாகவே பொழுது கழிந்தது. சில தினங்களில் கடம்பன் மாலை தீவுக்குச் செல்லத் தயாராக சஞ்சயனும் இவர்களோடு அவனை வழியனுப்பத் துணைக்குச் சென்றான்.

யாழ்தேவியில் கொழும்பை அடைந்தவர்கள் வெள்ளவத்தையில் ஒரு ஹோட்டலில் இரண்டு அறைகளை எடுத்துத் தங்கினார்கள். ஆயுஷ், சஞ்சயனுடனும் நன்றாக ஒட்டிக் கொண்டான். அதனால் சஞ்சயன் முடிந்தவரை ஆயுஷோடு தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, ஹோல் பேஸ் கடற்கரை என்று வெளியே சுற்றி புதுமணத் தம்பதிகளுக்குத் தனிமை கொடுத்தான்.

அப்படிக் கிடைத்த ஒரு தருணத்தில் கடம்பன் தன் மனம் திறந்து வைஷாலியோடு பேசினான்.

“வைஷூ...! கொஞ்ச நாளைக்குள்ள திடீரென்று உனக்கு இப்படியான ஒரு சிற்றுவேசனுக்கு அடப்ட் ஆகிற கஷ்டம் என்று எனக்கும் புரியுது. அதுதான் நான் உன்னை இங்க விட்டிட்டுப் போறன். நீ முதல்ல ஆயுஷோட சேர்ந்து பழகி இந்த புது வாழ்க்கைக்கு உன்னைத் தயார்படுத்திட்டு உனக்கு எப்ப என்னட்ட வரப் பிடிக்குதோ அப்ப வா...

ஆயுஷூக்கு அம்மா மட்டும் இல்லாமல் நீ எனக்கும் ஒரு மனைவியாக இருந்தால் எனக்கு ரொம்ப சந்தோசமாக இருக்கும். உனக்கே தெரியும்... எனக்கு உன்னை எவ்வளவு பிடிக்கும் என்று. ஆனால், நான் உன்னைக் கட்டாயப்படுத்தப் போறதில்லை வைஷூ. உனக்கும் என்னைப் பிடிக்கும்தானே... அந்த விருப்பம் காதலாகிற நாளைக்காக நான் நம்பிக்கையோட காத்திருக்கிறேன் வைஷூ...”

அவன் கரங்களில் அடங்கியிருந்த தனது கரங்களையே பார்த்தவாறு அமைதியாக இருந்தாள் வைஷாலி. அவள் இருதயமோ நூறு மீற்றர் ஓட்டப் பந்தயம் ஓடி முடித்தது போலத் துடித்துக் கொண்டிருந்தது. கணவனின் மென்மையான தொடுகையில் ஒரு இதத்தையும் பாதுகாப்பையும் உணர்ந்தவள், மெதுவாய் நிமிர்ந்து அவன் கண்களை நோக்கி, சம்மதமாய் தலையசைத்தாள்.

தன்னை நோக்கி மலர்ந்த செந்தாமரையாய் இருந்த அவள் வதனத்தைக் கையிலேந்தியவன், அவள் முன்னுச்சியில் முத்தமிட்டு விட்டு,



“என்னை ரொம்பநாள் காக்க வைக்க மாட்டாய் என்று நம்புகிறேன்...” என்றான்.

கடம்பன் புறப்பட்டுச் சென்று சில நாட்கள் கடந்திருக்க, ஆயுஷ் வைஷாலி உறவு மேலும் பலப்பட்டிருக்க ஆயுஷ் அப்பாவிடம் போவோம் என்று கேட்க ஆரம்பித்தான். வைஷாலியும் சரியென சஞ்சயனின் உதவியோடு மாலைதீவிலிருந்த வக்கறு தீவை அடைந்தார்கள். வைஷாலிக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. தான் பூலோகத்தில்தான் இருக்கிறேனா என்று. எங்கு பார்த்தாலும் நீலநிறக்கடலும் வெண்மணல் பரப்புமாய் இருந்த அந்த இடத்தை விட்டுக் கண்களை அகற்ற முடியவில்லை அவளால். சிறு பிள்ளையாய் ஆயுஷோடு சேர்ந்து கடற்கரையில் ஓடி விளையாடினாள்.

கடலை ஊடறுத்து தனித் தனிக் குடில்களாய் அமைந்திருந்த காட்டேஜ்கள் உள்ளே அனைத்து நவீன வசதிகளுடனும் சேர்ந்து சொர்க்க லோகத்தை சிருஷ்டித்திருந்தன. இவர்கள் வீடும் கடற்கரையை ஒட்டியே இருந்தது. வீட்டுக்குப் போனதுமே வைஷாலி கடம்பனிடம் சொன்ன முதல் வார்த்தை,

“இங்கையப்பா! கண்ணா பள்ளிக்கூடம் போறவரை நாங்கள் இங்கேயே இருப்பம். பள்ளிக்கூடம் போறநேரம் பார்த்து வேற இடம் போகலாம்...”

கடம்பனுக்கு அவள் வார்த்தைகள் காதில் தேன் வார்த்தன. சஞ்சயனும் அங்கு சில தினங்கள் தங்கி நன்றாக நீந்தி விளையாடி விட்டுக் கடலுணவு வகைகளையும் நன்றாக வெளுத்து வாங்கி விட்டு இலங்கைக்குப் புறப்பட்டான்.

**(அவள் கனவு நனவாகுமா...?)**

வெயில் அது
மெல்ல முகில்
விலகிட வருகிறது
முற்றத்தைக் காட்டி

தந்த வெம்மை
கொஞ்சம் தான்

அடி அன்புள்ள
எந்தன் பூவே

## இளவெயில் பொழுது



✍ நதுநசி

ஆரவம் இல்லை
ஆத்திரமும் இல்லை
அழகு இருக்கும்
அமைதி இருப்பதால்

மெல்ல வந்த
மெல்லிய கீற்று

பார்த்துப் பேசலாம்
பக்கம் நீ வந்தால்

இன்று மலர்ந்த
மல்லிகையும் பார்
மின்னி ஒளிரும்
அந்த கதிர் பட்டு

---

## பாதை

எல்லாப்பாதையும்
பாதம் படுவதால்த்தான்
பாதை ஆகிறது

பாதம் படா
பாதையாவும் வாதையாகித் தகிக்கும்

பாதம் நீர் இறைக்கிறது
பாதம் பூக்களை உதிர்க்கிறது
பாதம் பட்டாம் பூச்சிகளை பறக்க
விடுகிறது
பாதையெனும் நந்தவனம்
பாதமெனும் உழவனின் கூடாரம்

பாதை அதுவாக இருப்பது
ஒருதியாகமெனில்
அதை அதுவாக இருக்கச் செய்த
பாதம் மகாதியாகத்தின் பேரொளி

இரு கரத்தினால் சத்தம்
சனிப்பதுபோல்
பாதத்துக்கும் பாதைக்குமான
பந்தமே காதலின் தேசிய
கீதமென்பேன்



✍ செல்வா

---

## விலைவாசி




மா விலையும்
எண்ணெய்விலையும்
ஏறியது பின் இறங்கியது
உலக சந்தையின் தாக்கம்
இந்த விலை ஏற்ற
இறக்கம்

இடியப்பமும் இட்டலியும்
ஏறியது ஏறியதுதான்
இறங்கவே இல்லை
இடியப்பமும்
இட்டலியும்
உலக சந்தையில்
இல்லையாம்

✍ ராவணா

---

வழிகளனைத்தையும்
மூடியிருக்கிறது
மழைக்காலப்
பேரிருள்
சகதியில் நெளிந்து

போகின்றன
மழை பற்றிய கவிதைகள்
எந்த மின்னலும்
இல்லாத நள்ளிரவில்
பறந்து வரும்

## மழைக்காலம்

தனக்கான வழியையின்னும்
தேடிக்கொண்டிருக்கின்றன
சிறு நத்தைகள்
திசைகளை தொலைத்த
இரவில் கூகைகளிடும்
கூச்சலில் கரைந்து

சிறு மின்மினியின்
ஒளிச்சிதறல்
உணர்த்தி விடுகிறது
பேரிருளுக்குள்ளும்
வாழ்வுக்கான வழிக்குறிப்பை...



✍ வில்லரசன்
கிளிநொச்சி.

---

விரும்பிய எதையாவது ஒன்றை
படித்துவிட அட்டையில்
ஒன்றுமில்லை
கிறுக்கி வைத்துவிட எழுந்தேன்
பேனாவில் உயிரில்லை
எதையும் ரசித்துவிட
அண்ணார்ந்தேன் விண்ணில்



## வெற்றுலகம்

எதுவுமில்லை
உண்டு மகிழ்ந்திட ஆசைப்பட்டேன்
பானையில் ஒட்டவில்லை
நிரந்தரமாய் ஒன்றை செய்யவும்
வெற்றி தூண்டவில்லை
உறங்கி கிடப்பவருக்கு சொல்ல

தட்டினேன் அவரும் எழும்பவில்லை
இதுதான் வாழ்வா என்று
திரும்பினேன் பின்னால்
யாருமேயில்லை

✍ கி. கிருத்திகன்

---

என் காவியம் பாடிடும் வேளையில்
இளமாமயில் ஆடுது சோலையில்
என் ஜதிகள் தேடிடும் போதினில்
இரு பாதங்கள் நடமிடும்
சாலையில்
என் குரலில் பிறப்பது ராகம்
இரு கரங்களில் தெரிவது தாளம்
என் தாளங்கள் அவளிடம் சேரும்
அவள் பாவங்கள்
அதற்கிணையாகும்



✍ ம.அக்ஷரா

## பெண் என்ற நர்த்தகி



கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர
கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.
அ.கிருபாகரன்
-அதிபர்-
குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தவணைமுறைக் கட்டணங்கள்.
இரவிலும் வாகன பயிற்சிகள்.
NP L 2222
தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com
சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777




ENJOY REFRESHING TASTE
pepsi
BLUBERRY CREAM HOUSE
Chavakachcheri Road, Manthikai.
T.P: 077 588 0437
ஒரு முறை சுவைத்திடுங்கள்
உன்னதத்தை உணர்ந்திடுங்கள்
BLUBERRY CREAM HOUSE
pepsi

# டுவிட்டரைக் கையகப்படுத்தினார் எலான் மஸ்க்



எலான் மஸ்க் டுவிட்டரை கையகப்படுத்தியதற்குப் பிறகு பல மாதங்களாக ஒப்பந்தம் செய்து முடித்துள்ளார்.

அவரது முதல் நடவடிக்கை சமூக ஊடக நிறுவனத்தின் உயர் மட்டத் தலைமையை நீக்குவதாகும், இது மேடையில் உள்ள ஸ்பேம் கணக்குகளின் எண்ணிக்கையில் அவரைத் தவறாக வழி நடத்துவதாக அவர் குற்றம் சாட்டினார்.

டுவிட்டரின் தலைமை நிர்வாகி பராக் அகர்வால், தலைமை நிதி அதிகாரி நெட் செகல் மற்றும் சட்ட விவகாரங்கள் மற்றும் கொள்கைத் தலைவர் விஜயா காடே ஆகியோரை மஸ்க் பதவி நீக்கம் செய்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒப்பந்தம் முடிந்து கட்டடத்தை விட்டு வெளியே அழைத்துச் செல்லப்பட்டபோது அகர்வால் மற்றும் செகல் டுவிட்டரின் சான் பிரான்சிஸ்கோ தலைமையகத்தில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

ஒப்பந்தம் முடிவடைந்ததற்கு ஒப்புதல் அளிக்கும் வகையில் மஸ்க் பின்னர் “பறவை விடுவிக்கப்பட்டது” என்று டுவீட் செய்தார்.

டெஸ்லா மற்றும் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனர் ஏப்ரல் மாதம் மீண்டும் வழங்கிய தனது அசல் சலுகையை பறிக்க முயற்சித்ததற்காக சமூக ஊடக நிறுவனம் அவர் மீது வழக்குத் தொடுத்த பின்னர், விசாரணைக்குச் செல்வதைத் தவிர்ப்பதற்காக ஒப்பந்தத்தை முடிக்க ஒக்ரோபர் 28 வரை காலக்கெடு வழங்கப்பட்டது .

மஸ்க் மற்றும் டுவிட்டர் ஒக்ரோபர் 17 அன்று நீதிமன்றத்தில் வரவிருந்தன, ஆனால் உலகின் மிகப் பெரிய பணக்காரரர் எல்லாவற்றிற்கும் பிறகு வாங்குவதாகக் கூறியதால் அது பின்னுக்குத் தள்ளப்பட்டது.

இந்த வாரத் தொடக்கத்தில், மஸ்க் டுவிட்டரின் சான் பிரான்சிஸ்கோ தலைமையகத்திற்குள் ஒரு மடுவை சுமந்து செல்லும் வினோதமான வீடியோவை வெளியிட்டார் : “டுவிட்டர் தலைமையகத்திற்குள் நுழைகிறேன் - அது மூழ்கட்டும்”.

தனது டுவிட்டர் பயோவை “தலைமை டுவிட்” எனப் புதுப்பித்துள்ள மஸ்க், வியாழனன்று தான் சமூக ஊடக தளத்தை அதிக பணம் சம்பாதிப்பதற்காக வாங்கவில்லை, மாறாக “நான் நேசிக்கும் மனிதகுலத்திற்கு உதவ முயற்சிக்கிறேன்” என்று கூறினார்.

அவர் டுவிட்டரில் ஸ்பேம் போட்களை “தோற்கடிக்க” விரும்புவதாகவும் அதன் பயனர்களுக்கு உள்ளடக்கம் எவ்வாறு வழங்கப்படுகிறது என்பதை தீர்மானிக்கும் அல்காரிதம்களை பொதுவில் கிடைக்கச் செய்யவும், மேலும் அவர் தணிக்கையை மட்டுப்படுத்தினாலும் வெறுப்பு மற்றும் பிரிவினைக்கான எதிரொலி அறையாக மாறுவதைத் தடுக்கவும் விரும்புகிறார்.

அவர் இந்த விருப்பங்களை எவ்வாறு அடைவார் மற்றும் நிறுவனத்தை யார் நடத்துவார் என்பது பற்றிய விபரங்களை அவர் வழங்கவில்லை - மேலும் அவரது திட்டங்களைப் பற்றி இதுவரை தெளிவற்றதாகவே இருந்து வருகிறார்.

எலான் மஸ்க் முதன்முதலில் டுவிட்டருக்கு கோரப்படாத ஏலத்தை ஏப்ரல் மாதம் செய்தார், அது அவருக்கு விருப்பமாக இருந்தது.

இடைப்பட்ட காலத்தில் டுவிட்டர் தனது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பது பற்றிய தகவல்களைத் துண்டு துண்டாகக் கழித்தார்.

மஸ்க் இந்த வாரம் டுவீட் செய்த போதிலும் பயனர்கள் மேடையில் வைப்பதைக் குறைவாகக் கட்டுப்படுத்துவதைப் பரிந்துரைக்கிறார்.

ஆனால், அமெரிக்காவில் பெரிய இடைக்காலத் தேர்தல்களும், பிரேஸிலில் அதிபர் தேர்தலும் நெருங்கி வருகின்றன.

அந்த இரண்டு நிகழ்வுகளும் தவறான தகவல்கள் மற்றும் தேர்தல் மறுப்பு ஆகியவற்றால் பாதிக்கப்படும் வாய்ப்பு உள்ளது.

எனவே, உலகின் மிகப்பெரிய தகவல் தொடர்பு தளங்களில் ஒன்றான மஸ்க்கிற்கு இது முதல் பெரிய சோதனையாகும். அவரது சிவப்புக் கோடுகள் எங்கே என்பதை விரைவில் கண்டுபிடிப்போம்.

அறிக்கைகளின்படி, மஸ்க் தனது வருகையின் போது ஊழியர்களிடம், நிறுவனத்தை கையகப்படுத்திய பிறகு டுவிட்டர் ஊழியர்களில் 75% வரை குறைக்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

நிறுவனத்தின் 7,500 ஊழியர்களில் முக்கால் பங்கைக் குறைப்பதாக முதலீட்டாளர்களிடம் மஸ்க் கூறியதாக முன்னர் தெரிவிக்கப்பட்டது.

மற்ற திட்டங்களில், வெளிப்படையாகப் பேசும் கோடீஸ்வரர் மீண்டும் மீண்டும் ஒரு “சூப்பர் ஆப்” என்று குறிப்பிட்டுள்ளார், அதை அவர் தற்காலிகமாக “ஓ” என்று அழைத்துள்ளார்.

இந்த கருத்து சீனாவின் WeChat உடன் ஒப்பிடுகிறது, இது செய்தியிடல், சந்தை மற்றும் பொது டுவிட்டர் பாணி இடுகைகள் போன்ற பழக்கமான அம்சங்களை ஒருங்கிணைக்கிறது.

ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் படி, விளம்பரங்களை நம்பியிருப்பதைக் குறைக்க பயனர்களுக்கு பிரீமியம் சந்தாக்களை விற்கத் திட்டமிட்டுள்ளதாக மஸ்க் முதலீட்டாளர்களிடம் கூறியுள்ளார்.

மற்ற இடங்களில், டுவிட்டரில் வெறுக்கத்தக்க, தீங்கு விளைவிக்கும் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான உள்ளடக்கம் பெருகும் என்று அஞ்சப்படுகிறது.

அவர் “முழுமையான பேச்சு” மீதான தனது நம்பிக்கையைப் பற்றி முன்பு பேசியுள்ளார், மேலும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் போன்ற இடைநீக்கம் செய்யப்பட்ட மற்றும் அடிக்கடி சர்ச்சைக்குரிய நபர்களை மேடைக்கு திரும்ப அனுமதிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

உலகின் மிகப் பெரிய பணக்காரரின் மிதமான நிலைப்பாடு, சேவையின் “மிகவும் மோசமான” ட்ரோல்கள் செழித்து வளர ஒரு வழியாகும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர், இது டுவிட்டரை “வைல்ட் வெஸ்ட்” ஆக மாற்றும்.

28 ஒக்ரோபர் காலக்கெடு, ஒப்பந்தத்திற்கு நிதியளிக்க மஸ்க்கிற்கு நேரம் கொடுக்க வேண்டும். அது நிறைவேற்றப்படாவிட்டால், டுவிட்டர் இணைக்கப்பட்டுள்ள அமெரிக்க மாநிலமான டெலாவேரில் உள்ள ஒரு நீதிபதி நவம்பர் மாதம் விசாரணைக்கு ஏற்பாடு செய்திருப்பார்.

கையகப்படுத்துவது தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே பல மாதங்களாக இருந்த மோசமான இது முடிவுக்குக் கொண்டு வருகிறது, மஸ்க் மேடையில் போலி கணக்குகள் குறித்து புகார் அளித்தார் மற்றும் பாதுகாப்பு அபாயங்கள் குறித்து கட்டுப்பாட்டாளர்களை டுவிட்டர் தவறாக வழிநடத்தியதாக குற்றச்சாட்டு உள்ளது.

■

# போராட்டங்களைக் கண்டு கொள்ளாத...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி...)

வேண்டும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. குழந்தைகளுடனும் சிறுவர்களுடனும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது பொலிஸார் வன்முறை பிரயோகித்ததால் அதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது.

தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மையம் (TUCC), சிவில் அமைப்புகள், ஆசிரியர்கள், அதிபர்கள், தனியார், தோட்ட மற்றும் பிற துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கவாதிகளின் பங்கேற்புடன் வியாழக்கிழமை (27) “அடக்குமுறையை நிறுத்து” மற்றும் “மக்களின் குரலுக்கு இடம் கொடு” என்ற தொனிப்பொருளில், அதிவேகமாக அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகளுக்கு மத்தியில் பொதுமக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கான தீர்வை வழங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி கொழும்பில் போராட்டம் நடைபெற்றது.

பொதுமக்களின் போராட்டம் நடத்தும் உரிமையை நசுக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிராக பேரணி நடத்தப்படும் எனத் தெரிவித்தார். அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு காரணமாக அனைத்து அரச, அரை அரச, தனியார் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள், ஓய்வூதியம் பெறுவோர் ஆகியோருக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவை வழங்குமாறு TUCC அழைப்பாளர் வசந்த சமரசிங்க, கருத்துத் தெரிவித்தார். “எமது அடிப்படையான கருத்துச் சுதந்திரம் நசுக்கப்படுகிறது. இந்த அரசு பல விதிகளை அமுல்படுத்துவதன் மூலம் மக்களின் கருத்தைத் தடுக்க திட்டமிட்டுள்ளது. கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பிடும் போது பணவீக்கம் 82% ஆக உயர்ந்துள்ள நிலையில், அவர்களின் வாழ்க்கைச் செலவுகள் வேகமாக அதிகரித்து வருவதால், அனைத்து மாநில மற்றும் அரச சார்பற்ற துறை ஊழியர்களுக்கும் வாழ்வாதாரக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்” என சமரசிங்க கூறினார்.

துறைமுக அதிகாரசபை ஊழியர்கள், தொலைத்தொடர்புத் துறை ஊழியர்கள் மக்கள்வங்கி ஊழியர்கள், இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தினர்.

அரசுக்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. ஆனால், அரசாங்கம் அவற்றைக் கணக்கில் எடுக்காது. அரசியல் செய்கிறது. அரசியல்வாதிகள் மக்களிடம் செல்ல வேண்டிய காலம் வரும் அப்போது மக்கள் பதிலடிகொடுப்பார்கள். ■




(07 ஆம் பக்கத்தொடர்ச்சி...)

# தீர்வு குறித்த வாக்கெடுப்பு...



வில்லை என்பனபோன்ற வார்த்தைகளுடன் கூட்டமைப்பு முடித்துக் கொண்டது.

2009 இற்கு பிந்திய கடந்த 13 வருடங்களும் இவ்வாறே கடந்து போயுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தை தாமே கொண்டு வந்ததாக பெருமை பேசிய கூட்டமைப்புத் தலைவர்களால் இன விவகாரத்துக்கான தீர்வினை நல்லாட்சி காலத்தில் ஒரு அங்குலம்தானும் நகர்த்த முடியாது போயிற்று.

தற்போதைய ரணில் - மஹிந்த அரசாங்கத்தின் ‘ஒட்சிசன்’ மஹிந்த தரப்பினரே அன்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அல்ல. அந்தவகையில் இன விவகாரத் தீர்வுக்கான பொதியுடனான அரசியலமைப்பு உயிர் பெறுமா என்பது சந்தேகமே. எனினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இன்றைய அறிவிப்பு ரணில் - மஹிந்த அணியினரின் அரசியல் எதிர்காலத்தை நோக்கிய நகர்வுக்கான வியூகமே அன்றி வேறு ஒன்றும் இல்லை. இந்த வியூகத்தை நகர்த்தவே ‘சொல்ஹெம் பொறி’ களம் இறக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் காலத்துக்குக் காலம் ஓதுகின்ற ‘சாத்தான் வேதத்தை’ வைத்து இன்றைய தமிழ்த் தலைமைத்துவங்கள் தமிழ் மக்களை எவ்வளவு காலத்துக்கு இருட்டுக் குகைக்குள் தீர்வைத் தேடும் பயணத்தைத் தொடரப் போகின்றன. எவ்வளவு காலத்திற்கு பேரினவாத வேதாளம் முருங்கை மரம் ஏறும் கதையைக் கூறப்போகின்றனர். இதற்கு முற்றுப் புள்ளி இடப்பட வேண்டும்.

தமிழ் மக்களுக்கு இன்று தேவை ஒரு சர்வசன வாக்கெடுப்பு. அது தாயகத்திலும் புலம் பெயர் தேசங்களிலும் ஒருசேர நடத்தப்பட வேண்டும்.

இந்த வாக்கெடுப்பு தமக்கான அரசியல் தீர்வை தமிழ் மக்களே தீர்மானிப்பதாகவும் இருக்க வேண்டும். இலங்கைக்கும் சர்வதேசத்திற்கும் தமிழ் மக்களின் இந்தத் தீர்வு ஒட்டு மொத்த சர்வதேசத்திற்கும் செய்தியாக இருக்க வேண்டும்.

ஏனெனில் 2012 ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு விஜயம் செய்த பிரிட்டிஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு தமது நிலைப்பாடுபற்றி தெரிவிக்கையில் ‘நாட்டன் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வென்பது எமது கைகளில் இல்லை. அதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களையே எம்மால் வழங்க முடியும் என்று தெரிவித்தது.

ஆனால், சர்வதேச பூகோள அரசியல் கள நிலவரம் அதுவல்ல என்பது தமிழ் மக்கள் அறிவர். தமிழ் மக்களின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் பெரும் சக்தியாக சர்வதேசமே உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. சர்வதேசத்துக்கான செய்தியாக வாக்கெடுப்புச் செய்தி அமையட்டும். ■





# மகளிர் இறுதிப் போட்டிக்கான டிக்கெட்டுகள் விற்பனை

ஐரோப்பிய, தென் அமெரிக்க உதைபந்தாட்ட சம்பியன்களுக்கு இடையே முதல் மகளிர் இறுதிப் போட்டி வெம்பிலியில் நடக்க உள்ளது, ரிக்கெட்டுகள் திங்கள் கிழமை (ஒக்ரோபர் 31) விற்பனைக்கு வர உள்ளன. 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் திகதி இங்கிலாந்தை எதிர்த்து பிறேஸில் விளையாட உள்ளது.

UEFA மற்றும் தென் அமெரிக்க காற்பந்து கூட்டமைப்பு (CONMEBOL) ஆகியவற்றுக்கு இடையேயான நீண்ட கால கூட்டாண்மையின் ஒரு பகுதியாக இந்தப் புதிய போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்குப் பிறகு அவுஸ்திரேலியா, நியூஸ்லாந்தில் நடைபெறும் பீபா மகளிர் உலகக் கிண்ணப் போட்டிக்கு முன் இந்தப் போட்டி மற்றொரு போட்டிக்கு அடையாளமாக இருக்கும்.

தென் அமெரிக்க சம்பியனான பிறேஸில் அடுத்த ஏப்ரலில் வெம்பிலியில் நடக்கும் முதல் மகளிர் இறுதிப் போட்டியில் ஐரோப்பிய சம்பியன் இங்கிலாந்தைச் சந்திக்க உள்ளது.

போட்டிக்கான டிக்கெட்டுகள் ஒக்ரோபர் 31 திங்கட்கிழமை காலை 11 மணி முதல் CET விற்பனைக்கு வர உள்ளது.

கூட்டம் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், ரசிகர்கள் தங்கள் இருக்கைகளை சீக்கிரமாகப் பாதுகாக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

டிக்கெட் விலை 16 அல்லது அதற்குக் குறைவான குழந்தைகளுக்கு +7.50 ($8.60/8.65) மற்றும் பெரியவர்களுக்கு +15 ($17.35/17.30) முதல் நான்கு பேர் கொண்ட குடும்பம் உலகின் சிறந்த வீரர்களில் சிலரை வெறும் +45 இல் இருந்து பார்க்க முடியும். ($52.10/51.95). ■

## ஜேர்மனியையும் பிரான்ஸையும் எதிர்கொள்ளுமா ஜப்பான்



ஜப்பானின் தொடர்ந்து ஏழாவது உலகக் கிண்ணப் போட்டியில் பங்கு பற்றுகிறது. மூன்று முறை 16 ஆவது சுற்றுக்கு வந்துள்ளது. ஆனால், அதற்கு மேல் செல்லவில்லை.

ஜப்பான் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பெல்ஜியத்திடம் 3-2 என்ற கணக்கில் தோற்றது. 2010 இல் பெனால்டியில் பராகுவேயால் வெளியேற்றப்பட்டது, மேலும் 2002 இல் அந்த நாடு தென் கொரியாவுடன் இணைந்து நடத்தியபோது துருக்கியிடம் 1-0 எனத் தோற்றது.

ஜப்பான் பயிற்சியாளர் ஹஜிம் மொரியாசு கூறுகையில், இந்த முறை காலிறுதிக்கு செல்வதே இலக்கு. ஆனால், அது எளிதாக இருக்காது. ஜேர்மனி, ஸ்பெயின் மற்றும் கோஸ்டாரிகாவுடன் ஜப்பான் குழு E இல் உள்ளது - ஒருவேளை கனையயரில் மிகவும் கடினமான குழு.

இரண்டு ஐரோப்பிய அணிகளும் எப்போதுமே உலகக் கோப்பையை வெல்லும் விருப்பத்தில் உள்ளன, மேலும் கோஸ்டாரிகா 2014 இல் பிறேஸிலில் காலிறுதிக்கு முன்னேறியது. ஜேர்மனி நான்கு முறையும் 2010 இல் ஸ்பெயின் வெற்றியும் பெற்றுள்ளன. "கடந்த ஆறு போட்டிகளில் நாங்கள் செய்த அதே விடயங்களைச் செய்வதன் மூலம் நாங்கள் வெற்றிபெற முடியும் என்று நான் நினைக்கவில்லை," என்று மொரியாசு கூறினார், "ஆடுகளத்தில் யார் இருந்தாலும் நாங்கள் செயல்படவும் போட்டியிடவும் முடியும்."

அமெரிக்கா மற்றும் ஈக்வடார் அணிகளுக்கு எதிரான செப்ரெம்பர் நட்புப் போட்டிகளுக்கு முற்றிலும் மாறுபட்ட இரண்டு அணிகளை களமிறக்கிய பிறகு, நவம்பர் 23 அன்று ஜேர்மனியை எதிர்கொள்ள மொரியாசு யாரைத் தேர்ந்தெடுப்பார் என்பதைப் பார்க்க வேண்டும். இந்த ஆண்டின் தொடக்கத்தில் டோக்கியோவில் உள்ள தேசிய ஸ்டேடியத்தில் பிறேஸிலிடம் ஜப்பான் 1-0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்ததில் களத்தில் மிகவும் அச்சுறுத்தலான வீரராக இட்டோ தோன்றினார்.

ஜப்பானின் டோக்கியோ ஒலிம்பிக் அணியின் முகமான டேக்ஃபுசா குபோ மற்றும் கௌரு மிட்டோமா ஆகியோர் அணியில் இடம் பெறுவார்களா அல்லது தீப்பொறிகளாக களமிறங்குவார்களா என்பது நிச்சயமற்றது. ஒலிம்பிக் வெண்கலப் பதக்கத்திற்கான போட்டியில் மெக்சிக்கோவிடம் ஜப்பான் 3-1 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது. இந்த ஜப்பான் அணி உலகக் கோப்பை அனுபவத்தில் இலகுவாக இருக்கலாம். 26 இடங்கள் இருப்பதால், கோல்கீப்பர் எய்ஜி கவாஷிமா மற்றும் டிஃபென்டர் யூடோ நாகடோமோ போன்ற மூத்த வீரர்களை மொரியாசு பெஞ்சில் இருத்தி இளைய வீரர்களை அமைதிப்படுத்தலாம். 2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கோப்பையில் உலகின் தலைசிறந்த அணிகளை வீழ்த்தும் திறன் கொண்டதாக ஜப்பான் காட்டியது. ஜப்பான் 52 நிமிடங்களுக்குப் பிறகு பெல்ஜியத்தை 2-0 என முன்னிலைப்படுத்தியது, ஆனால் கடைசி நேரத்தில் வெற்றி கோலில் 3-2 என்ற கோல் கணக்கில் வீழ்ந்தது. உலகக் கோப்பை சாம்பியனான பிரான்ஷிடம் தோற்று அரையிறுதிக்கு முன்னேறியது பெல்ஜியம். ■

## இந்திய மாற்றுத்திறனாளி கிரிக்கெட் அணியின் கப்டனானார் சச்சின் சிவா

இந்திய மாற்றுத்திறனாளிகள் கிரிக்கெட் அணியின் கப்டனாக தமிழகத்தைச் சேர்ந்த சச்சின் சிவா என அழைக்கப்படும் டி.சிவக்குமார் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

மதுரை மாவட்டம், தெப்பக்குளம், மருது பாண்டியர் நகரில் வசித்து வருபவர் சிவா. இவர் பிறந்த 6 மாதத்திலேயே போலியோவால் கால் பாதிக்கப்பட்டு சரியாக நடக்க முடியாமல் போனது.

சிறுவயது முதல் கிரிக்கெட் மீது ஆர்வம் கொண்ட இவர், தனது நண்பர்களுடன் சேர்ந்து விளையாடி வந்தார். பல நேரங்களில் புறக்கணிக்கப்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் விளையாட்டிலேயே முழுக் கவனம் செலுத்தியுள்ளார். சிவாவை அவரது நண்பர்கள் 'சச்சின்' சிவா என அழைக்கத் தொடங்க இன்று அதுவே அவரது அடையாளமாக உள்ளது.

பள்ளி, கல்லூரி என தனது கிரிக்கெட் பயணத்தைத் தொடர்ந்த சச்சின் சிவாவிற்கு மாற்றுத்திறனாளிகள் கிரிக்கெட் பற்றி 2013 இல் தெரிய வந்தது. இதனையடுத்து தனது சொந்த முயற்சியால் தமிழக அணியில் இடம் பிடித்த சிவா, குறுகிய காலத்திலேயே தமிழக அணியை வழிநடத்தும் வாய்ப்பை பெற்றார். இதனையடுத்து 2016 ஆம் ஆண்டு இந்திய மாற்றுத்திறனாளிகள் அணிக்காக விளையாடும் வாய்ப்புக் கிடைத்தது.

அதில் சிறப்பாக விளையாடி 2019 ஆம் ஆண்டு வைஸ் கேப்டனாக உயர்ந்தார். கடந்த 3 ஆண்டுகளாக வைஸ் கேப்டனாக அவர் புரிந்த சாதனைகள் அடிப்படையில் அவர் தற்போது கப்டனாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். வேகமாக அரை சதம் அடித்தது மற்றும் அதிக ரன்கள் குவித்தது என பல் வேறு சாதனைகளைப் படைத்துள்ளார் சச்சின் சிவா. இது குறித்து பேசிய சிவா, "எனது 15 ஆண்டு கடின உழைப்பு கைகொடுத்துள்ளது. நான் இந்திய அணியை வழிநடத்தப்போவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது" எனக் கூறினார். மேலும், "இத்தனை ஆண்டுகள் இந்திய அணிக்காக விளையாடினாலும் எங்களுக்கு கிடைக்க வேண் டிய அங்கீகாரம் கிடைக்கவில்லை. எங்கள் சம்பளம்கூட பிரதான அணிக்கு நிகராக இருந்ததில்லை" எனவும் கூறினார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த சச்சின் சிவா இந்திய மாற்றுத்திறனாளிகளின் கப்டனாகத் தேர்வு செய்யப்பட்டதற்கு மதுரை எம்.பி.சு.வெங்கடேசன் உட்பட பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். ■



இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 29.10.2022 அன்று வெளியிடப்பட்டது.